Registered No. M. 801

"உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு"

THE . . . AGRICULTURIST

A Monthly Journal devoted to
Agriculture and its allied Subjects

கிருஷிகன்

ஓர் மாதாந்தர விவசாயப்பத்திரிகை

Vol. 2 / புத்தகம். 2 — சாதாரணஹு வைகாசிமூ 1உ / 1910ஹு மேமூ 14உ — Part. 2 / பிரதி. 2

Contents		பொருளடக்கம்	
The Emperors Death ...	17	இந்திய சக்கிரவர்த்தியின் மரணம் ...	17
The Ryots supply of Green Leaf Manure	18	கிருஷிகருக்கு வேண்டும் தழை எரு ...	18
Stems & Dried Leaves of Plantains	22	வாழைமட்டைகளும்இலைச் சருகும் ...	22
Paddy & Rice	24	நெல் அரிசி ...	24
Hemorragic Scepticæmia ...	25	மென்னை அடைப்பான் ...	25
Proverbs	26	பழமொழிகள் ...	26
Nature Study—Portia tree By Mr.R.Ry. Rao Bahadur J. Dharmaranga RajuGaru	28	இயற்கை அறிவு பூவரச மரம் ம-ா-ா ஸ்ரீ ராவ்பகதூர் ஜே. தர்ம ரங்க ராஜூ அவர்களால் ...	28
Correspondence	29	கடிதம் ...	29
Review of Books	31	புஸ்தக விமர்சனம் ...	31
News & Notes	32	குறிப்புகள் ...	32

வருஷசந்தா தபால்கூலி உள்பட அணா 12
Annual Subscription including Postage As. 12 only

Edited and Published by

J. R. RANGA RAJU,
5, Mount Road, Madras

[*All Rights reserved*]

☞ இதைச் சற்றுக் கவனியுங்கள்

தேன்காசி,
24—2—1910.

பிரியமான ஐயா,

தாங்களனுப்பிய "சந்திரகாந்தா" வென்னும் நாவல் வந்து பார்த்து ஆனந்த சாகரத்திலாழ்ந்தினம். இவ்வித இனிய நூலை எம் பார்வைக்கெட்டச்செய்த கடவுளைப் பல்லாயிரம் கோடிதரம் ஸ்தோத்திரிப்பதோடுகூட தங்களது வாழ்நாள் பூராவாகவேணுமென்பது எமது சித்தாந்தம். இது நிற்க, தங்களால் பிரசுரிக்கப்பெற்ற "இராஜாம்பாள்" என்னும் நாவலை எம் பார்வைக்குக் கொண்டுவர அபேக்ஷிப்பதால் மேற்குறித்த நாவல் பிரதியொன்று அடியிற் காணுமெமது விலாசத்திற்கு உடனே அனுப்ப வேண்டுகின்றனம்.

தங்கள் உண்மையான,

ஏ. எச் அப்துல்லதீப் சாயபு,
சைத்சூலமான் தெரு,
தேன் காசி (திருநெல்வேலி)

இப்படியே "சந்திரகாந்தா" என்னும் நாவலையும் "இராஜாம்பாள்" என்னும் நாவலையும் வாங்கியவர்கள் அவைகளைப் புகழ்ந்து நூற்றுக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்களனுப்பி யிருக்கிறார்கள். அவையெல்லாம் பிரசுரிக்க இடம் போதாதாகையால் நிறுத்திவிட்டோம். மொத்தத்தில் இந்த இரண்டு நாவல்களை வாசிக்க வாசிக்க, சந்தோஷத்தையும் ஆனந்தத்தையும் மனோஉற்சாகத்தையும் வியப்பையும் கொடுக்குமென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை.

"சந்திரகாந்தா" விலை அணா 12.
தபால் கூலி வி. பி. கமிஷன் அணா 3 பிரத்தியேகம்.
"இராஜாம்பாள்" விலை அணா 12.
தபால் கூலி வி. பி. கமிஷன் அணா 2 பிரத்தியேகம்.
இந்த இரண்டு அபூர்வமாகிய நாவல்கள்

வேண்டியவர்கள்

ரங்கராஜு அண்ட் பிரதர்ஸ்,
5, மௌண்ட்ரோட், சென்னை.

என்று எழுதி உடனே வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

தயார்! தயார்!! தயார்!!!

பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னப்பட்டணம்
1908 ௵த்து 1 வது ஆக்ட் (தமிழில்)

இதில் சென்னப்பட்டணம் 1909-ம் ௵த்து 4-வது ஆக்ட் அதாவது பூஸ்திதிகளிலுள்ள நிலத்தைப்பற்றிய சென்னப்பட்டணம் 1808-௵த்து ஆக்டைத் திருத்துவதற்கான ஆக்ட் அடங்கியிருக்கிறது.

இந்த புஸ்தகம் பூஸ்திதிகளையுடைய ஒவ்வொருவரிடத்திலும் அவசியமிருக்கவேண்டியது.

ஜி. சி. லோகநாதம் பிரதர்ஸ்,
மவுண்டுரோட், சென்னை.

இதன் விலை அணா 6.

THE AGRICULTURIST

A monthly Journal devoted to agriculture and its allied subjects

கிருஷிகன்

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை

Vol. 2 புத்தகம் 2	ஸாதாரண௵ வைகாசி௴ 1௳ 1910௵ மே௴ 14௳	No. 2 பிரதி 2

இந்திய சக்கிரவர்த்தியின் மரணம்

THE EMPEROR'S DEATH

இங்கிலாந்து தேசத்து அரசனும் இந்தியா தேசத்து சக்கிரவர்த்தியுமான காருண்ணியமுள்ள மாக்ஷிமைதங்கிய ஏழாம் எட்வர்ட் சக்கிரவர்த்தி சென்ற மே௴ 6௳ வெள்ளிக்கிழமை இரவு பரமபதமடைந்தார் எனக்கேட்டு நாம் மெத்தவும் வியசனிக்கிறோம். இவ்விந்து தேசத்துக்கு இதற்குமுன் எந்த அரசனுடைய ஆழுகையிலும் கிடைக்காத அனேக சுதந்தரங்களும் நன்மைகளும் இவருடைய ஆழுகையில் கிடைத்தன. இவருடைய அரசாக்ஷி வெகு சொற்பகாலமாக விருந்தபோதிலும் விவசாயவிஷயத்திலும், மற்றெல்லா விஷயங்களிலும் இவர் செய்ததற்கு ஒப்பான நன்மை இதற்குமுன் ஒருகாலத்திலும் நாம் அடைந்திருப்பதில்லை. இவர் இளவரசராயிருந்தபோதுஇந்த தேசத்தை நேரில் சுற்றிப்பார்த்து இந்தியர்களில் அநேகருடன் சம்பாஷித்து அவர்களுடன் வேட்டையாடி விளையாடி சல்லாபித்து இத்தேசத்தில் எல்லா விஷயங்களை நேரில் கண்டறிந்தவரானதால், வேறொருவர் மூலமாய்த் தாம் அறிந்துகொள்ளாமல் எல்லாக் காரியங்களையும் சுதாவாய் நடத்தக்கூடிய திறமையும், இந்தியர்களிடத்தில் பக்ஷமும் இவருக்கு அதிகமாயிருந்தது. இவர் பேரையும் இவர் நற்குணங்களையும் அறியாத இந்தியர்கள் எவருமில்லை. ஆகையால் இவர் இறந்துபோன சமாசாரம் எல்லாருக்கும் மிக்க மனவருத்தத்தை யுண்டாக்கும்.

கிருஷிகருக்கு வேண்டும் தழை எரு

THE RYOT'S SUPPLY OF GREEN LEAF MANURE

சில தினங்களுக்கு முன் ஒரு டிவிஷணலாபீசர் ஜமாபந்தி செய்துகொண்டிருந்த இடத்துக்குப் போயிருந்தோம். அந்தக் கிராமத்துக் கணக்குகள் கையெழுத்தானவுடன் டிவிஷணலாபீசர் அந்தக் கிராமத்து ஜனங்களை யழைத்து "தகரார்" ஏதாவதுண்டாவென்று கேட்டார். அப்போது அங்கு கூடியிருந்த ஜனங்கள் "ஐயையோ! காட்டிலாகாதாரர்களின் காரியங்களால் எங்களுக்கு வர வர எண்ணிறந்த கெடுதிகள் சம்பவித்திருக்கின்றன. எங்கள் கால்நடைகள் சுதேச்சையாய் மேய்ந்துகொண்டிருந்த காடுகளும் மலைச்சரிவுகளும் இப்போது காவற் காடுகளாக்கப்பட்டன. அந்த எல்லையோரமாக எங்கள் கால்நடைகள் போனாலுங்கூட காட்டிலாகா காவல்காரர் அவைகளைக் கட்டிக்கொண்டுபோய் பட்டியிலடைத்து அபராதமும் தீவனக்கூலியும் வசூல் செய்வதுந் தவிர காடுகளில் நஷ்டமுண்டானதாகத் தெரிவித்து அந்த நஷ்டத்தையும் வசூல்செய்துவிடுகிறார்கள். அந்தத் தொகையைக்கொடுக்கவில்லையானால் மேஜிஸ்டிரேட்டிடம் வியாஜ்யம் தொடருகிறார்கள். ஏரிக்கரைகளிலும் ஏரி நீர்ப்பிடி புறம்போக்குகளிலுமுள்ள கொஞ்சநஞ்சம் மேய்ச்சலாவது எங்கள் கால்நடைகளுக்குக் கிடைக்கிறதா? அதுவுமில்லை. முன்காலத்தில் இவ்விடங்களிலுள்ள கருவேல், வெள்வேல் மரங்களில் எங்கள் ஆடுகள் தங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை அடைந்துகொள்ளும். தற்காலத்திலோ அம்மரங்களின் அடியில் கூடப்போகக்கூடாது. இன்னும் ஒரு காரியம் கேளுங்கள். எங்கள் கிராமத்தில் பொது நன்மைக்கென்று சில தீர்வை ஏற்பட்ட தரிசு நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டுவராமல் வைத்திருக்கிறோம். மேலும் அவைகள் ஓடையும், கரம்புங் காடுமாய்க் கிடக்கின்றன. அவைகளில் ஆவாரை, கொழுஞ்சி, விராலி முதலிய செடிகள் வளர்ந்து அடர்ந்திருக்கின்றன. எங்கள் நஞ்சை நிலத்தின் சத்துக்காக இந்தத் தரிசு நிலங்களிலுள்ள தழையை அறுத்துக்கொண்டுபோய்ப் போட எண்ணினாலோ அது செய்ய முடியாது. ஏனென்றால் காட்டிலாக்கா ரேஞ்சாபீசிலிருந்து இந்த நிலங்களிலுள்ள ஆவாரம் பட்டையை ஒரு மனிதனுக்குக் குத்தகைக்கு விட்டிருக்கிறார்கள். அந்த மனிதனோ எங்களை அந்த வழியில் சும்மா நடக்கவும் ஒப்பமாட்டான். தப்பித் தவறி யாராவது கொஞ்சம் தழை அறுத்துவிட்டால் ஆவாரம்பட்டை திருடியதாகக் கட்டுப்பாடாய்க் கைதுசெய்து விடுகிறார்கள். இப்படி எல்லா விஷயத்திலும் எங்களுக்கு நிர்ப்பந்தம் சகிக்கக்கூடாமலிருக்கிறது. இனி எஜமானவர்கள் எங்களை ஊரைவிட்டுப் போய்விடக் கட்டளையிட்டால் எங்கேயாவது பட்டணக்கரை

தேடிச்சென்று ஏதாவது கூலிவேலை செய்தாவது பிழைத்துக் கொள்வோம்'' என்று சொன்னார்கள்.

இவ்வளவு சமாசாரத்தையும் பொறுமையுடன் கேட்ட டிவிஷனல் ஆபீசர் "நீங்கள் ஒருவரும் ஊரைவிட்டுப் போகவேண்டியதில்லை. இன்னது தான் நடக்கிறதென்பதை நியாயமாக நமக்கு நீங்கள் தெரிவிப்பதில்லை. நீங்கள் நியாயமான காரியங்களைச் செய்வதுமில்லை. இதெல்லாம் விட்டு எடுத்தவுடன் ''ஊரைவிட்டுப் போய்விடுகிறோம்.'' என்று வீண் வம்பு பேசுகிறீர்கள். இது சரியல்ல. நான் சொல்வதைக் கேளுங்கள். உங்களுடைய முதல் தாவா என்ன? உங்கள் கால்நடைகளுக்கு மேய்ச்சலுக்கு இடமில்லை யென்பது; முன்போல அவைகளை மலைச்சாரல்களிலும் காவல் காடுகளுக்குள்ளும் மேயவிடுவதில்லை யென்பது முற்றிலும் உண்மையே. முன் காலத்தில் அதிகமாய் மழைகள் பெய்து பயிர்கள் நன்றாய் விளைந்ததாகவும், இக்காலத்தில் அடிக்கடி மழைக் குறைவு நேரிட்டுப் பயிர்கள் தீய்ந்து போகிறதாகவும் நீங்களே சொல்லுகிறீர்கள். நமது மலைகளில் மரங்கள் அடர்ந்திருக்கவில்லையானால், நம் ஆறுகளிலும் ஊற்றுகளிலும் தண்ணீர் வற்றிப்போகாமல் என்னசெய்யும்? மழைகளும் எப்படிச் சரியான அளவுக்கும் சரியான காலத்திலும் பெய்யக்கூடும்? இவ்விஷயத்தைஉங்களுக்குத் தெரியும்படி விவரிக்க வேண்டுமானால் எனக்குச் சாவகாசமில்லை; இன்றைக்கு வாய்தாபோட்டிருக்கும் சம்மரி வியாஜ்யங்கள் ஒன்றும் விசாரிக்க நேரமிருக்காது. ஆகையால் நான் சொல்வது உண்மையென்று நம்புங்கள். காடுகளில் மரங்கள் அடர்ந்திருக்கவில்லையானால், மழைகள் குறைந்துபோகும் என்பதில் தடையேயில்லை. காடுகளில் மாடுகளைவிட்டு மேய்த்தால் புதிதாயுண்டாகும் செடிகளின் தலையை அவைகள் கடித்து விடுமே. அப்பால் செடிகளும் மரங்களும் எப்படி யுண்டாகிறது? அதிலும் ஆடுகளையும் வெள்ளாடுகளையும் விட்டுவிட்டாலோ அங்கே ஒரு பூண்டுகூட இல்லாமல் இரண்டுநாளில் நிர்மூலப்படுத்திவிடும் என்பது உங்களுக்குத் தெரியாமலிருக்கவில்லை. ஆகையால் காட்டிலாக்காக்காரர் இவ்விஷயத்தில் செய்திருக்கும் காவல் ஏற்பாடுகள் மிகவும் நியாயமானவைகள் தான்.''

"ஆனால் 'எங்கள் கால்நடைகள் மேய இடமேங்கே?' என்பீர்கள். உங்கள் கிராமத்தில் காவல் காடுதவிர, கிராமத்தாரின் பொதுவான உபயோகத்துக்கென்று சுமார் 100-ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலத்தைக் காவல் காடுகளுக்குச் சமீபமாக "ரிசர்வு'' செய்யாமல் விட்டிருக்கிறார்கள். அது காடு புறம்போக்கு என்று கணக்கில் தாக்கலாயிருக்கிறது. அந்த நிலங்களில் ஒரு பாகத்தை நான் இன்றுகாலையில் சுற்றிப் பார்த்துவந்தேன். அங்கே நாகதாளிப்

புதர்கள் சில விடங்களில் நெருங்கியிருக்கின்றன. மற்றவிடங்களில் ஆவாரையும் விராலிச்செடிகளும் முளைத்து வளர்ந்திருக்கின்றன. இவைகளுக்கருகில் சிலவிடங்கள் கல்கரட்டு நிலங்களாயிருந்தாலும், மழைகாலத்துக்குப் பின் புல்லுண்டாகாமற் போகாது. இது தவிர சுமார் 100-ஏக்கர் தீர்வைத் தரிசுநிலங்கள் உங்கள் கிராமத்திலிருக்கின்றன. அவைகளிலும் உங்கள் கால்நடைகளை மேய்த்துக்கொள்ளலாம். இப்படியெல்லாமிருக்க 'கால்நடைகளின் மேய்ச்சலுக்கு இடமில்லை' யென்று நீங்கள் சொல்லுவது வம்பு வார்த்தையாகையால் அதை நாம் ஒப்பமாட்டோம். ஆனால் காவல் காடுகளிலும் மலைச்சாரல்களிலு முண்டாகும் ஏராளமான புல் இங்கேகிடையாது. என்றாலும் உங்களுக்கு மேய்ச்சலென்பது சுத்தமாய் இல்லாமல் போகவில்லை என்பது நிச்சயம்.''

"உங்கள் இரண்டாவது முறைபாடு, ஏரிகளிலுள்ள வேல மரங்களின் இலை காய்களை உங்கள் ஆடுகளும் வெள்ளாடுகளும் தின்னவிடுவதில்லை யென்பது. இங்கேயும் வெள்ளாடுகளைவிட்டால் கொஞ்சக்காலத்தில் வேலமரங்கள் எல்லாம் மொட்டையாய்விடும். ஆகையால் அதையும் விட்டுவிடுங்கள்.''

"அடுத்த விஷயம், பச்சைத்தழை எரு கிடைப்பதில் வருத்தமிருப்பதாகச் சொல்லுகிறீர்கள். காடுகளில் தீர்வை கொடுத்துத் தழையறுத்துக்கொள்ளத் தடையில்லை. அதுவெகு தொலைதூரத்திலிருக்கிறதென்றால் ரிசர்வுசெய்யப்படாத புறம்போக்கு நிலங்களிலும் தீர்வைத்தரிசு நிலங்களிலுமுள்ள செடிகளின் தழைகளை உங்கள்கிராமத்தில் ஏற்பட்டவழக்கப்படி நீங்கள் அறுத்துக்கொண்டு போய் உபயோகிக்கலாம். ஆனால் ஆவாரம்பட்டையைக் காட்டிலாக்காதார்கள் குத்தகைக்கு விட்டிருக்கிறார்கள் என்று தெரிவிக்கிறீர்கள். அப்படிக் குத்தகைக்கு விட்டதாலென்ன? நீங்கள் பட்டைக்குக்கெடுதிநேரிடாதவிதமாய் தழையை மட்டும் அறுத்துக் கொள்ளத் தடையிருக்காது. குத்தகைதாருக்கு தழையை எடுத்துக் கொண்டுபோகும் பாத்தியதை கிடையாது. அப்படி அவர் எடுத்துக்கொண்டுபோனால் கிராமத்தார் அவரைத் தடைசெய்யலாம். மேலும் பட்டை யுரித்தெடுக்குங்கால மின்னதென்று நீங்கள் கவனித்து, அந்தக் காலத்துக்கு ஒருவாரத்துக்கு முன்னதாகவே நீங்கள் போய் தழையை அறுத்துக்கொண்டால், அந்தச் செடிகளின் வளர்ச்சிக்கு யாதொரு கெடுதியுமுண்டானதாக ஏற்படாது. ஆவாரைத்தழைக்கு இப்படி; மற்றவகைத் தழையோ உங்களுக்குத் தேவையானபோது தடையில்லாமல் எடுத்துக்கொள்ளலாம். கவர்ன்மெண்டார் உங்களுக்குக் கொடுத்திருக்கும் சுதந்தரங்களையும் பாத்தியதையையும் அறிந்துகொள்ளாததாலும், அந்த நிபந்தனைப்படி நடவாததாலும், அடிக்கடி அவைகளை மீறி நடப்பதாலும் நீங்கள் கேடடைகின்றீர்கள்.''

"உதாரணமாகக் கேளுங்கள். ரெவினியூ போர்டாருடைய 19-வது ஸ்டான்டிங் ஆர்டர் என்னும் நிலையான உத்திரவில் ஒரு கிராமத்திலுள்ள தீர்வைத் தரிசுநிலங்களிலும் புறம்போக்கு நிலங்களிலும் பொது நன்மைக்காகவும் சொந்த உபயோகத்துக்காகவும் கனிமரங்களாவது விறகுக்கென்று உபயோகிக்கும் மரங்களையாவது வைத்து உண்டுபண்ணுவதற்காக நிலங்களைஜாரி செய்யலாமென்ற உத்திரவு அடங்கியிருக்கிறது. அப்படி ஜாரி பெற்றுகவில்நாமாவில் கண்ட நிபந்தனைகளின்படியே தப்பாமல் கனிமரங்கள் அல்லது விரகுக்கு உபயோகயாகும் மரங்கள் அல்லது தழையெருக் கொடுக்கும் மரங்கள் செடிகள் முதலியனவை பயிரிட்டு உண்டாக்கினல் அந்தத்தோப்புக்கு 20-வருஷம்வரை தீர்வையொன்றும் வசூல் செய்யப்படமாட்டாது. அதற்குப்பின் தரப்படி தீர்வை வசூல் செய்யப்படும். இப்படி மரங்கள் வைத்துண்டு பண்ணுவதுபோலவே காடடர்ந்து கிடக்கும் தரிசு அல்லது புறம்போக்கு நிலங்களையும், நாகதாளிப் புதர் அடர்ந்தவைகளையும், தண்ணீர் கட்டிய சதுப்புநிலங்களையும், கோரை முளைத்துச் சாகுபடிக்கு லாயக்கில்லாமலிருக்கும் இடங்களையும் வெட்டித் திருத்திச் சாகுபடிக்குக்கொண்டுவரவும், நிலங்களின் சத்து விர்த்திக்காக எருவாக உபயோகிக்கும் தழைகளைக் கொடுக்கக்கூடிய மரங்களையும் செடிகளையும் வைத்துண்டாக்குவதற்கும் ஐந்து வருஷம் முதல் 20-வருஷம்வரை தீர்வையில்லாமல் நிலம் ஜாரிசெய்யலாம் என்னும் உத்திரவு 17,-வது (ஸ்டான்டிங் ஆர்டரில்) நிலையான உத்திரவில் இருக்கிறது. இவ்விரண்டு விதமாகவும் நிலங்களை ஜாரிபெற்று உங்களில் ஒவ்வொருவரும் கொஞ்ச விஸ்தீரணத்தில் உங்கள் நஞ்சை நிலங்களுக்கு வேண்டிய அளவுக்குத் தழை யெரு சம்பாதித்துக் கொள்ளலாமே! நீங்கள் ஏன் அப்படிச் செய்வதில்லை? முன் இப்படி விதி இருக்கிறதென்பது உங்களுக்குத் தெரியாதென்பது ஒருக்கால் நிஜமாயிருந்தாலும்,இப்போதாவது தெரிந்துகொண்டீர்களல்லவா? இனியாவது எம்மிடத்தில் மனுச் செய்துகொள்ளுங்கள். உங்களுக்கு இவ்விஷயத்துக்கு எவ்வளவு நிலம்வேண்டுமானுலும் தரச் சித்தமாயிருக்கிறோம்" என்று சொல்லி முடித்தார்.

இந்த விதமான விதிகள் ஏற்பட்டிருப்பது எமக்கு இதற்கு முன் தெரியாது. அப்படியிருக்க, மற்ற சாதாரண கிருஷிகருக்குத் தெரியாமற்போனது ஆச்சரியமல்ல. இவ்விஷயம் எல்லாக்கிருஷிகருக்கும் தெரியவேண்டும் என்னும் நோக்கத்துடன் இங்கு வெளியிட்டிருக்கிறோம். இனிமேலாவது நமது கிருஷிகர் சர்க்காரிலிருந்து நமக்குக்கருணையுடன் கொடுத்திருக்கும் நன்மையான சுதந்தரங்களையும் அனுமதிகளையும் அறிந்துகொண்டு அவைகளால் அடையக்கூடியபயனைமுற்றிலும் அடைவார்களென்று நம்புகிறோம்.

வாழைமட்டைகளும் இலைச்சருகும்

STEMS & DRIED LEAVES OF PLANTAINS

திருச்சினப்பள்ளி ஜில்லா குளித்தலை தாலுகாவிலும், கோயம் புத்தூர்ஜில்லா கரூர், ஈரோடு தாலுகாக்களிலும் தஞ்சாவூர் ஜில்லாவின் பலவிடங்களிலும், திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீ வைகுந்தம் தாலுகாவிலும் வாழை சாகுபடி அதிகமாய்ச் செய்யுமிடங்களில், அதில் முதல் மாசூல் எடுத்தவுடன் அந்த வாழைகளை வெட்டி யெறிந்து விடுகிறார்கள். பட்டணங்களுக்குச் சமீபமாயுள்ள கிராமங்களில் மட்டைகளையுரித்து வாழைத்தண்டை எடுத்து விற்கிறார்கள். அப்படி எடுத்தாலும் எடுக்காவிட்டாலும், வெட்டப்பட்ட வாழைகளின் மட்டைகளையும் வாழையிலைச் சருகுகளையும், ஓரிடத்தில் குவித்து வைத்துக் கோடைக்காலத்தில் காய்ந்தவுடன் அவைகளைத் தீயினால் எரித்துவிடுகிறார்கள். இப்படியவர்கள் செய்வதற்கு முக்கிய காரணம் என்னவென்றால் வெட்டப்பட்ட வாழைச்சருகுகளும் மட்டைகளும் அதிகமாய்க்குவிந்து அதிக நிலத்தை அடைத்துக் கொண்டிருக்கும். அதை எரித்துவிட்டால் கொஞ்ச அளவுள்ள சாம்பலாய் நீறிப்போகும். அந்தச் சாம்பலையும் நிலத்துக்கு எருவாக்கலாம் என்னும் எண்ணத்தால்தான்.

இப்படி இவர்கள் செய்வதில் கிருஷிகருக்கு அதிகமான நஷ்டம் சம்பவிக்கிறது. ஒரு வண்டி வாழைமட்டைகளையும் சருகுகளையும் எரித்தால் ஒருகூடை சாம்பலாகும். சாதாரணமாக ஏக்கர் ஒன்றுக்கு 1000-வாழைக்கு அதிகமாய் நடுகிறார்கள். அந்த 1000-வாழைகளின் மட்டைகளும் சருகுகளும் சுமார் 50-வண்டி மூலவர்க்க எருவாகும். அவைகளை எரித்துவிட்டால் ஐந்துவண்டி சாம்பல்கூட அகப்படாது—"50-வண்டி மூலவர்க்க எருவிலுள்ள சத்துதானே இந்த ஐந்து வண்டி சாம்பலிலிருக்கிறது" என்று கிராமாந்திரக்கிருஷிகர் அடிக்கடி சொல்வதுண்டு. அது சரியல்ல. எரித்த சாம்பலில் வாழையிலுள்ள தாதுப்பொருட்கள் மட்டுமிருப்பதே தவிர, மூலவர்க்கப் பொருட்கள் முழுவதும் எரிந்து மாயமாய் விடுகின்றன. இந்த மூலவர்க்கப் பொருட்கள் ஒரு நிலத்தில் சேர்ந்தால் பலவிதத்திலும் அந்நிலத்திற்கு பிரயோஜனமுண்டாகிறது. பயிர்களுக்கு ஜீவனைப்போலிருக்கும்நைட்ரோஜன் என்னும் வெடியுப்புவாயுவை இந்த மூலப்பொருட்கள் உண்டாக்குகின்றன. நிலத்தின் தன்மையைப் பண்பாக்கவும், வெயில்காலத்தில் தண்ணீர்த்தட்டைத் தாங்கவும், பயிர்களின் வேர்களில் இக்காற்று புகவும், தண்ணீர் எளிதில் மண்ணிலிறங்கிவடியவும், உழுவதற்கு மிகக்கடினமாயிருக்கும் நிலத்தைப் பசளை மண்ணாக்கவும், மணற்பாங்கு நிலத்தைக் குருமண்ணாக்கவும் மூலப்பொருட்கள் உதவுகின்றன. ஆகையால் மூலவர்க்கப்பொருட்களில் எதையும் எரித்

துச் சாம்பலாக்கக்கூடாது. விதை பிடித்த களைப்பூண்டுகளைமட்டும் எரித்துவிடவேண்டும். மற்ற மூலவர்க்கப் பொருட்களை எரிப்பதால் நாம் மேலே சொன்ன பல நஷ்டங்களும் சம்பவிக்கும்.

அப்படியானல் இந்த வாழைமட்டைகளையும் சருகுகளையும் என்ன செய்வது? ஒவ்வொரு நிலத்திலும் 10-அடி சதுரத்தில் ஆழமானகுழி தோண்டி வைக்கவேண்டும். அதில் இந்த மட்டைகளையும் சருகுகளையும் வெட்டிப்போட்டு ஒவ்வொரு அடுக்கின்மேலும் சமீபத்திலுள்ள கால்வாய் வண்டலாவது குளத்தின் கரம்பை மண்ணுவது கொஞ்சம் கொண்டுவந்து போட்டு மூடவேண்டும். இப்படிச் செய்வதால் இரண்டு மூன்று மாதக்காலத்தில் வெகு சாரமுள்ள எருவுண்டாகிறது. அது வாழைப்பயிருக்கு மிகவும் உபயோகமுள்ள எருவென்பதில் சந்தேகமில்லை.

வாழை அதிகமாய் நன்செய் நிலங்களிலேயே பயிராகின்றன. அந்த நன்செய் நிலங்களிலிட்ட நெற்பயிருக்கே கிராமத்திலுள்ள தொழு எரு முழுவதும் உபயோகித்து விடுகிறார்கள். வாழைப்பயிருக்குச் சாம்பலும் கொஞ்சம் தழை எருவும்தான் கிடைக்கும். அதனுல் வாழைமாசூல் மிகவும் கம்மியாகிறது. மேலும் வாழைப் பயிரிட்டிருக்கும் நன்செய் நிலங்களுக்கு எல்லாக் காலங்களிலும் எருவண்டிகள் போகமுடியாது. ஆகையால் அவைகளுக்கு எரு வைப்பது பிரயாசமாகிறது. ஒரு நிலத்திலிட்ட வாழைப்பயிர் $2\frac{1}{2}$-அல்லது மூன்று வருஷங்களுக்கு அழிவதில்லை. இவ்வளவு காலத்துக்கு அதற்குத்தக்க எருவிடவில்லையானுல் அதின் மாசூல் அதிகமாய்க் கம்மியடையக் கேட்பானேன்?

வாழைத் தோட்டங்களுக்கருகில் வண்டிகள் போகக்கூடிய சாதனங்கள் அமைந்திருக்கு மிடங்களில் மட்டைகளையும் தோகைகளையும் வேறுவிதமாயும் உபயோகப்படுத்தலாம். தற்காலத்தில் தஞ்சாவூர் திருச்சினுப்பள்ளி ஜில்லாக்களில் கால் நடைகளின் சிறுநீரனது அவம் போகாமல் சேகரிப்பதற்காக மாட்டுத் தொழுக்களில் சண்டு, சருகு, செத்தை ஏதாவது விரித்து வரவேண்டுமென்று நாம் போதித்தால் அவ்விடங்களில் சண்டாவது சருகுகளாவது அகப்படாது என்று கிருஷிகர் சாக்குப்போக்கு சொல்லி விடுகிறார்கள். அப்படி வைக்கோற்சண்டு, பலவித இலைச்சருகுகள் முதலியன அகப்படாத விடங்களில் இந்த வாழைத்தடைகளும் சருகுகளும் மாட்டுத்தொழுக்களில் விரிக்கவேண்டியதற்கு அதிக உபயோக முள்ளதாயிருக்கும். கூடுமானபோதெல்லாம் இந்த வஸ்துக்களை இவ்விதமாய் உபயோகிக்கலாம்.

சென்றமாதச் சஞ்சிகையில் "கால் நடைகளின் அபிவிருத்தி" யென்னும் தலைப்பின்கீழ் எழுதியிருக்கும் வியாசம் மெஸ்தர் R. C. உட் துரையவர்களால் எழுதப்பட்டதென்பதை அந்த வியாசத்தின் கீழ் பிரசுரம் செய்யத் தவறி விட்டதற்காக விசனிக்கிறோம். ப. ர்,

நெல்-அரிசி
PADDY AND RICE

நமது தேசத்தில் வருஷா வருஷம் நெல் சாகுபடியாகும் விஸ்தீரணம் சராசரியில் 7-கோடி ஏக்கர் என்று கணக்கிடப்படுகிறது. அரிசியை முக்கிய உணவு தானியமாக உபயோகிக்கும் ஜனங்களின் தொகையோ அனேகங் கோடியாயிருக்கலாம். ஆகையால் அரிசியின் வஸ்து நிர்ணயமும் உபயோகங்களும்எல்லாரும் அறிந்துகொள்ளவேண்டியது அத்தியாவசியம். கல்கத்தா மியூசியம் மேல் பார்த்துவரும் மெஸ்தர் டேவிட் ஹசுப்பர் என்பவர் செய்த பரிக்ஷையினாலும், மணில்லாத் தீவில் சிலதினங்களுக்கு முன் கூடிய வைத்திய மஹா சங்கத்தவர்களின் ஆராய்ச்சியினாலும், நாம் சாப்பிடும் அரிசியில் பிரகாசித சத்து குறைவாயிருப்பதனால் பெரி பெரி யென்னும் ஒரு வகையான நீர்க்கோர்வை ரோகம் உண்டாகிறதாகத் தெரியவருகிறது. இவ்வியாதியுண்டானவுடன் தேகத்தில் அதிகப் பலவீனமுண்டாகும்; கால்களில் முதல் வீக்கமுண்டாகும். அதன்பின் தேகமும் முகமும் வீங்கும். மூச்சுமுட்டும். வாந்தி யுண்டாகும். சிறுநீர் சாதாரண அளவுக்குக் குறைவாய்க் கழிவாகும். தாகம் அதிகமாகும். நாடி நடை அதிக்கிரமிக்கும். இருதயத்துடிப்பு உண்டாகும். பிறகு மூச்சு முட்டல் அதிகமாகும். அப்பால் தேகஸ்திதி அதிக க்ஷீணமடையும். இவ்வியாதி யுண்டாகி இரண்டு மூன்று வாரங்களில் மரணம் சம்பவிக்கும். இந்த இலக்ஷணங்களினால் இந்தப் பெரி பெரி யென்னும் வியாதியை அறிந்துகொள்ளலாம். இவ்வியாதி யுண்டாவதற்கு முக்கிய காரணம் நாமுண்ணும் அரிசியில் பிரகாசிதசத்து குறைவாயிருப்பது தானென்று வெளியிட்டிருக்கிறார்கள். நெல்வகைகளில் எண்ணிறந்த தினுசுகளுண்டு. அவைகள் உருவத்திலும், பருமனிலும், நிறையிலும், நிறத்திலும், தகைமையிலும், குணாகுணங்களிலும் பேதமுடையவைகளாயிருக்கின்றன. அவைகள் ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு பேர்களுண்டு. அவைகளில் சில மற்றவைகளைவிட எளிதில் ஜீரணமடையும் தன்மையுடையன. வேறு சில தினுசுகளில் தேகபோஷணாசத்து அதிகமாயிருப்பதாக எண்ணப்படுகின்றன. சில வாசனைத்தினுசுகளா யிருக்கின்றன. சில இனிமையான சுவையை யுடைத்தாயிருக்கின்றன. சில தினுசுகள் மருந்துக்கு உபயோகப்படுவதாக எண்ணப்படுகின்றன. இவ்விதமாக எத்தனையோ பேதமுள்ளவைகளாயிருந்தாலும், அவைகளில் எந்தத் தினுசும் இயற்கையான ஸ்திதியில் பெரி பெரி யென்னும் வியாதியை யுண்டாக்கக் கூடியவிதமாய் அவ்வளவு குறைவான பாஸ்கரசத்துள்ளதாயிருக்க வில்லையென்பது தீர்மானம். ஆனால், எந்தக் காரணத்தினால் இவைகளிலடங்கிய பாஸ்கரசத்து குறைவுபடுகிறதென்னும் விஷயத்தை ஆராய்ச்சி செய்ததில், அரிசியை வெள்ளையாக்குவதற்காகக் "குத்தி" "தீட்டி" "மினுக்கு"வது தான் என்று வெளியாகிறது. அரிசித் 'தவிடு' 'குத்துமி' யென்னும் வஸ்துக்களில், அரிசியைப் பார்க்கிலும் அதிக சாரமுள்ள உணவுப்பொருள்கள் அடங்கியிருப்பதாக ரசாயன சாஸ்திர நிபுணர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஆகையால் அரிசிச் சாதம் "தும்பைப்பூப்போல்" வெண்மையாயிருக்க வேண்டுமென்று திரும்பத் திரும்பத் தீட்டி மினுக்குவதால் அதிக சத்துள்ள தவிடு போக்கப்படுகிறதென்றும், அதனால் தேகபோஷணைக்கு அவசியமான பல பொருட்கள் குறைவு படுகின்றனவென்றும், ஆகையால் அரிசியைத் தீட்டிமினுக்காமல் அதின் இயற்கை ஸ்திதியிலேயே சமைத்துச் சாப்பிடுவது நலமென்றும் வெளியிட்டிருக்கிறார்கள்.

கழனிகளில் வேலைசெய்யும் கூலியாட்கள் கொழியலரிசிச்சாதம் சாப்பிட்டுக் கடுவெயிலில் வேர்வை சிந்த நெடுநேரம் இளைப்பின்றி வேலை செய்யும் சக்தியுடையவர்களாயிருக்கிறார்கள். அவ்வளவு சக்தி மெல்லிய வெள்ளையரிசி உணவு உண்பவர்களுக்கிருப்பதில்லை. இதனாலேயே நாம் மேலே சொல்லிய விஷயம் உண்மையென்று எல்லாரும் தெரிந்துகொள்ளலாம்.

நெல்பயிருக்குச் சரியானபடி எருவிட்டுச் சாகுபடிசெய்து விளைவித்த நெல்லில், சரியானபடி எருவிட்டு விளைவிக்காத நெல்லைவிட அதிகமான போஷண சக்தி யடங்கியிருப்பதாகவும் கண்டுபிடித்திருக்கிறார்கள். பெரிபெரி வியாதியுண்டாகாமலும் தேகபோஷண குறைவுபடாமலுமிருக்க வேண்டுமானால் நெல்லுக்குச் சரியானபடி எருவிட்டுப் பயிரிடவேண்டியது மன்றி, அரிசியை மினுக்கித்தீட்டாமல் அதன் இயற்கையான ஸ்திதியிலேயே உபயோகித்து வரவேண்டும். *"Madras Mail"*

மென்னை அடைப்பான்

HEMORRHAGIC SCEPTICÆMIA

கால்நடைகளுக்கு இந்த வியாதியுண்டானபின் இரண்டு அல்லது மூன்றுமணி நேரத்துக்குள் மரணம் சம்பவிக்கலாம். சில சமயங்களில் வியாதியுண்டாகி ஐந்தாறு மணிநேரம்வரை ஜீவித்திருந்து அதன்பின் மரணம் நேரிடலாம். சிலவேளைகளில் ஒன்று, இரண்டு அல்லது மூன்று நாளைக்குப்பின்னும் கால்நடைகள் மரணமடைவதுமுண்டு. இப்படி மூன்று நாளைக்குள் மரணம் நேரிடாவிட்டால் அக்கால்நடைகளுக்கு வியாதி அனேகமாய் குணப்படுமென்று நம்பிக்கை வைக்கலாம். இவ்வியாதியானது பெரும்பாலும் ஒருநாளைக்குள்ளாகவே அபாயம்விளைவிக்கக்கூடியதாகையால் கொஞ்சமும் தாமதமில்லாமல் இதற்குச் சிகிச்சை செய்யவேண்டும். பொதுவாக இவ்வியாதிகண்ட கால்நடைகளுக்குச் சிகிச்சை செய்வதில் பிரயோஜனமில்லையென்பது கால்நடை வைத்திய நிபுணர்களின் அபிப்பிராயம். என்றாலும் நம்மால் செய்யக்கூடியதைச் செய்யாமலிருக்கலாகாது. இவ்வியாதியால் கால்நடைகளுக்குத் தொண்டையில் சிறிது வீக்கமுண்டான உடனேயே அதைக்கண்டு பிடித்துவிட்டால் அப்பொழுது அக்கால்நடைகள் ஆகாரத்தை வருத்தமின்றி விழுங்கும் சக்தியுடையனவாயிருக்கும். அப்பொழுதே யவைகளுக்குக் கறியுப்பு அல்லது பேதியுப்பு முப்பது ரூபாய் எடை, கரியபோளம் ஒரு ரூபாய் எடை, சுக்குத்தூள் ஒரு ரூபாய் எடை, பனைவெல்லம் நாலு ரூபாய் எடை, இவைகளை அரைப்படி வென்னீரில் கலக்கி நகச்சூடாயிருக்கும்போது உள்ளே கொடுக்கவேண்டும். ஒருபடி தண்ணீரில் அரைக்கால் ஆழாக்கு பினைல் (Phenyle) என்னும் மருந்தைக் கலக்கியும் உள்ளுக்குக்கொடுக்கலாம். இதனால் தொண்டையிலும் மற்றவிடங்களிலும் உண்டாயிருக்கும் வீக்கங்கள்சற்றுக் குறைவுபடும். சில சமயங்களில் சூட்டுக் கோல்களைப் பழுக்கக் காய்ச்சி வீக்கங்களின்மேல் இலேசாய் சூடுபோடுகிற வழக்கமுமுண்டு. சூடுகளை அழுத்திப் போடாமல் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும். படிகாரம் கலந்த தண்ணீரைக்கொண்டு வியாதிப்பட்ட கால்நடையின்வாயை அடிக்கடி கழுவவேண்டும்.

இதுவன்றி ஒருமணி நேரத்திற்கு ஒருதரம் சரியானபடி பேதியுண்டாகும்படி கொஞ்சம் வென்னீரை அபானத்தின் வழியாய் உள்ளே செலுத்துவது நலமாயிருக்கும். வடித்த கஞ்சியில் நாம்சாப்பிடும் உப்பைக்கொஞ்சம் போட்டு அவைகளுக்கு வைக்கலாம். கால்நடைகள் அதிக துர்ப்பலமடைந்

திருந்தால் அரை ஆழாக்கு நாட்டுச் சாராயத்தில் இரண்டு ரூபாய் எடை சுக்குத்தூளும் ஒரு ரூபாய் எடை மிளகுத்தூளும் கலந்து அரைப்படி வடித்தகஞ்சித்தண்ணீரில்கலந்து உள்ளுக்குக்கொடுத்தால் சற்றுப்பலமுண்டாகும். இவ்விதமாகச் செய்யப்பட்ட சிகிச்சையினால் மரணத்திலிருந்து தப்பும் கால்நடைகள் மிகவும் சொற்பமே.

முன் நாம் பிரஸ்தாபித்த வெக்கை முதலான தொத்து வியாதிகளைப் போலவே மெண்ணை அடைப்பான் என்னும் வியாதியும் அதிகமாய் தொத்தும் சக்தியுள்ளது. ஆகையால் ஒரு பிராணிக்கு வியாதியுண்டான உடனேயே அதை மற்றப்பிராணிகளுடன் சேர்க்காமல் வேறாக்கி ஜாக்கிரதையுடன் சிகிச்சை செய்து வரவேண்டும்.

சென்ற டிசம்பர்மீ 31உ யோடு முடிவான மூன்று மாதங்களில் இவ் விராஜதானியில் தொத்து வியாதிகளால் மாணமடைந்த கால்நடைகளின் எண்ணம் 23364 என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. 1908-ம் வருஷம் இதே காலத்தில் மறணமடைந்த கால் நடைகளின் எண்ணம் 58985. சென்ற வருஷத்தில் மரணங்கள் குறைவானதற்கு முக்கிய காரனம் என்னவென்றால் எல்லா ஜில்லாக்களுக்கும் கால்நடை வைத்தியர்களை நமது காருண்ய கவர்ன்மெண்டார் அனுப்பி அங்கங்கேயுள்ள கால்நடைகளுக்குத் தொத்து வியாதிகள் உண்டாகாமல் அம்மை குத்தும் ஏற்பாடுகள் செய்து வந்தார்கள். இவ்விதமாய் டிசம்பர் மாதத்தோடு முடிந்த 3-மாதங்களில் இவ் விராஜதானியில் எல்லா இடங்களிலும் வெக்கை வியாதிக்கென்று 8500 கால்நடைகளுக்கு அம்மை குத்தப்பட்டதாம். இப்படி அம்மை குத்தியதால் கிருஷ்ணா, திருச்சினாப்பள்ளி, தஞ்சாவூர், நீலகிரி, மலையாளம் ஜில்லாக்களில் வெக்கை வியாதியில் மாணமடையும் கால்நடைகளின் தொகை மூன்றில் ஒருபங்காய் குறைந்துபோயிற்றென்று தெரிய வருகிறது. இது போலவே அடைப்பான் என்னும் வியாதியிலும் சென்ற வருஷத்தில் மரணமடைந்த கால்நடைகளின் எண்ணிக்கை அதற்குமுன் வருஷத்தை விட பாதிதான் என்று கணக்கிடப்பட்டிருப்பதாய் தெரிகிறது.

ஆகையால் மெண்ணை அடைப்பான் வியாதிக்கும் அம்மை குத்துவதே வெகு சிலாக்கியமென்று கால்நடை வைத்திய சாஸ்திர நிபுணர்கள் சொல்லுகிறார்கள். எப்பொழுதும் வியாதி வந்தபின் அதைக் குணப்படுத்த முயல்வதைவிட வியாதிவராமலே தடுக்கக்கூடிய ஏற்பாடுகள் செய்வது உத்தமமாகையால் நமது கிருஷிகரெல்லாரும் தங்கள் கால்நடைகளுக்கு அம்மைகுத்தும் விஷயத்தில் கவர்ன்மெண்டாருடன் ஒத்துமையாய் அவர்கள் இச்சிகிச்சைகளின் விஷயங்களில் சொல்லும் காரியங்களில் இடையூறுகள் யாதொன்றும் உண்டாகாதபடி வேண்டிய உதவிசெய்து தங்கள் கால் நடைகளைக் காப்பாற்றுவார்களென்று நம்புகிறோம்.

பழமொழிகள்

PROVERBS

"அழுது கொண்டிருந்தாலும்
உழுது கொண்டிரு."

இந்தப் பழமொழியின் அர்த்தத்தை அனேக கிருஷிகர் நன்கறிந்திருப்பது மன்றி அதைக் கைவிடாமல் அதிற் சொல்லியபடியே செய்துவருகிறார்கள், செங்கற்பட்டு முதலான சில ஜில்லாக்களில் போனவருஷம் மழைகள்

முன்னேறிப் பெய்துவர, கிருஷிகர் பின்மழை அதிகமாயிருக்குமென் றெண்ணி ஏராளமான நிலங்களை உழுது வீட்டிலுள்ள விதை முழுவதுங் கொண்டுபோய் வீசிப்பயிராக்கினர்கள். ஆனால் அவர்கள் நம் மூத்தோரின் முதுமொழிகளை நம்பி "ஆடிப்பட்டம் தேடிவிதை" யென்பதற்கிணங்கவும், "ஆவணிப் பட்டம்", "புரட்டாசிப்பட்டம்" என்னுந் தருணங்களிலும் தப்பாமல் விதைத்தது மட்டும் சரியாயிற்று. "ஐப்பசிமாதம் அழுகைத்தூறலும், கார்த்திகைமாதங் கனமழை"யும் கொஞ்சமாவது தலைகாட்டியிருக்குமேயானல் நம்மவர்கள் செய்தகாரியம் வெகு சாமர்த்தியமாகவே யிருந்திருக்கும். என்றாலும், போனவருஷத்தில் கால மழை சரியாய்ப் பெய்விக்கக் கடவுளுக்குக் கருணை தப்பியதோ! அன்றி நம்மவர் செய்யும் பாவம் மேலிட்டு "மாத மும்மாரி" பெய்யவேண்டியதை "வருஷம் மும்மாரி" யாக்கிற்றே! அல்லது வேறெந்தக் காரணத்தினலோ, எங்கே பார்த்தாலும் புன்செய்களிலும், நன்செய்களிலும், மானவாரிக் குளங்களிலும், ஆற்றுக்கால் ஏரிகளிலும், தூரவுகளிலும் மற்றெல்லாவிடங்களிலும் இளம்பயிரும் இனியபால் பிடித்த சிறுபயிரும், காய்பிடித்துத் தாள் கறுத்த கனப்பயிரும், எல்லாம் ஒன்றுபோலச் சாவியாய்ப் போனதைக்காண நமக்குக் கண் கலக்கமும் மனக்கலக்கமும் உண்டாயிற்று. அந்தோ! பரிதாபம்! ஏழைக் குடிகள் என்னசெய்வார்? இரண்டொரு நிலங்களில் மட்டும் இரவும் பகலும் தூரவுகளிலிருந்து நிரம்பத் தண்ணீரிறைத்திறைத்து இரத்தம் வடித்ததுபோல் வேர்வை சிந்திக் கொஞ்சம் தானியம் விளைவித்துத் தங்கள் உயிரைக் காத்துக்கொள்ள முயன்று வருகிறார்கள். அவர்களுக்கே இக்கெதியாகில், அவருக்குள்ள கன்றுகாலிகளுக்கு எக்கெதியோ? எல்லாரையுந் தர்க் காக்குமீசனே யறிவார்.

நன்செய் விளையாமல் சாவியான நிலங்களுக்குச் சர்க்கார் தீர்வை வஜாவாகிறது. புன்செய்த் தீர்வை வஜாசெய்யப்படவில்லை. அதற்காக வீட்டிலிருக்கும் வஸ்துக்களை விற்றும் கடன் வாங்கியும் செலுத்திக்கொண்டிருக்கிறார்கள். இவ்விதமாய் இடிவிழுந்ததுபோல் மீழாமிடியிலழுந்தி அவஸ்தைப்பட்டு அழுதுகொண்டிருந்தாலும், அவர்களில் சிலர் தங்கள் கால்நடைகளை ஓட்டிக்கொண்டுபோய்க் காலையிலேயே ஏர்கட்டித் தங்கள் நிலங்களை உழுதுகொண்டிருக்கிறார்கள். இது பார்க்கும்போது இவர்களுடன் வெகுகாலம் பழகிவந்த எமக்கே ஆச்சரியமுண்டாகிறது. ஏனெனில் சாதாரண காலங்களிலேயே பங்குனி சித்திரை மாதத்தில் வெயில் வெகு தீக்ஷண்யமாய்க் காயும். அதிலும் இவ்வருஷத்தில் "பங்குனிமாத வெயிலில் பகல்வழி நடந்த பாவத்தில் போவேனாகவும்" என்று பத்திரங்களில் எழுதுவது நிஜமாயிருக்க நாம் காணும்போதும், அந்த வெயிலையும் ஒருபொருட்டாக எண்ணாமல் ஏர் உழுதுகொண்டிருக்கும் எம்மவர்களின் நன்முறையை என்னென்பது. ஆ ஹா! மூதுரையின்படி நடப்பவர்கள் இவர்களே. இப்படி நிலங்களை உழவில்லையானல் வேறு என்ன செய்வது. தங்கள் கிருமங்களைவிட்டுக் கூலிவேலை தேடி பட்டணங்களுக்குச் சென்று ஜீவிக்க வேண்டும். அது நல்லதா? தங்கள் நிலங்களில் ஏர்போக்கிப் பண்படுத்தி, எப்போது ஒரு மழைபெய்யும் என எதிர்பார்த்திருந்து அப்படி பெய்தவுடன் எள்ளோ புல்லோ விதைத்துப் பயிராக்குவது நல்லதா? இதை யோசிக்கும்போது நம்மவர்கள் செய்வதே நலமெனத் தேர்ன்றுகிறது.

காலம் இப்படியே மழையில்லாமல் போய்விடுமோ? "ஒருமழை பெய்யாதா? உலகந் தழையாதா! என்று ஒப்பாரியிட்டு அழுது தண்ணீர் இறை

த்துவரும் ஏழைகளின் அழுகைக்கிறங்கிக் கடவுள் ஒரு நல்லமழை சீக்கிறத்தில் பெய்யும்படி செய்யமாட்டாரா? அப்படிக் கடவுள் மனமிறங்கியருளும்போது, அம்மழையைச் சரியானபடி உபயோகித்துக்கொள்ள நாம் தயாராயிருக்கவேண்டாமா! கோடையில் உழுது புழுதியாக்கிய நிலத்தில் மழை பெய்தவுடன் விதை விதைக்கக்கூடியதாகும். இல்லையாஞல் கரம்பு நிலம் உழுவதற்கும் ஈரம்போதா மற்போகுமே? இதை யெல்லாம் கவனித்தல்லவா இவ்வேழைக்குடிகள் இரத்தஞ் சொட்ட வெள்ளை வெயிலிலும் பாடுபடுகிருர்கள். இவர்களே மேற்சொன்ன பழமொழியின் கருத்தை நன்கறிந்தவர்களாகிருர்கள்.

"விதைமுதல் அகப்பட்டாலும் வெள்ளாமையை விடாதே" என்ற பழமொழிப்படி, இவ்வளவு பயிர்கள் தீயந்துபோன காலத்திலுங்கூட வெள்ளாமைக்கு முக்கியபருவமான உழவைக் கைவிடாது நடத்துவது எமக்கு அதிக சந்தோஷத்தைத் தருகிறது.

ஆனல் ஒரூரில் எத்தனை கிருஷிகர் இவ்விதம் செய்கிருர்கள்? எத்தனைபேர் அழுதுகொண்டு ஒன்றுஞ் செய்யாமல் வேப்பமரத்து நிழலில் படுத்துத் தூங்கிக் கொண்டிருக்கிருர்கள்? எத்தனைபேர் கோர்ட்டு கச்சேரிகளில் சிவில் மாஜிஸ்டிரேட்டுக் கேசுகளில் திரிந்துகொண்டிருக்கிருர்கள். எத்தனைபேர் சேவல்போர் வெள்ளாட்டுச் சண்டை இவற்றில் காலம்போக்குகிருர்கள்? இவ்விஷயத்தைக் கவனிக்கும்போது சந்தோஷப்பட்டிருந்த எம்மனம் ஆருத்துயரத்துக் குள்ளாகின்றது. "அழுதுகொண்டிருந்தாலும் உழுதுகொண்டிரு" என்னும் பழமொழி இப்படிப்பட்ட துர்பிக்ஷமான காலத்துக்கே பொருந்தியது. ஆகையால் எல்லாக் கிருஷிகரும் இப்பழமொழியைக் கைவிடாமல் அநுஷ்டித்து வருவார்களென்று நம்புகிகிருேம்.

இயற்கை அறிவு. பூவரசமரம்

NATURE STUDY—PORTIA TREE

சந்தம்

(பந்துபார்-பந்துபார் என்னும் மெட்டு)

1. பூவிதோ! பூவிதோ! பூவரசம் பூவிதோ!
   தாவிநான் தறித்துவந்த தளிர்நிறைந்த கிளையிதோ.
2. பாருமிவ் விளஞ்செடியில் பகருமத்யத் தண்டுமே
   நேரிலோங்கி யேவளர்ந்து நிலையடைவ தடிமரம்.
3. இந்தமத்யத் தண்டுமீ திருக்குமங்கங் கிலைகளே
   விந்தையைந் திலைகள்கீழ மேலும்வரிசை யில்லையே.
4. இவ்விலைகள் தண்டினே டிசைந்திருக்குஞ் சந்திலும்
   அவ்விதான உச்சியும் அரும்பிடுங் குருத்துமே.
5. நுனிக்குருத்து நீண்டபோது நோக்கிற் செடிகள் உயரமாம்
   தனிக்கணுக் குருத்துகள் தழைந்தபோது கிளைகளாம்.
6. பூவரசின் ஓர்கணுப் பொருந்துவ தொரேயிலை
   தாவரத் திரண்டிலைக் கணுக்கள் மற்றுஞ் சகஜமே.
7. கணுச்சந்து களிலிருந்து பூவுங்காயுங் கனியுண்டாம்
   அணுப்போல வேயிருந் தவைகள்பெரிய தாகுமே.
8. நீண்டிருக்கும் காம்பின்மீது நிற்பதிந்த இலையுமே
   ஆண்டுதோறுங் கோடையி லவைபழுத்து திர்ந்திடும்.

9. இலைகள்பச்சை நிறமடைந் திருப்பதும் அவற்றுளே
வலையின்கண்கள் போனரம்பு வரிபடர்ந் திருப்பதும்.
10. வடிவிலிரத் தாசயம் வரைந்த தாயிருப்பதும்
அடியில்வர்ணப் பேதமும்பின் ஆச்சரியந் தருவதே.
11. பாருமிம் மலர்களைப் பறித்துவந்த காம்புடன்
வாருமிங்கு சேர்ந்திவை வரிசையாக நோக்குவீர்
12. எண்ணிலைந்து பூவிதழ் இசைந்திருக்கு மியல்பிதோ
கிண்ணியென்னப் புறவிதழ்கள் கீழமைந்த அழகிதோ
13. பொன்னிறத்தைப் பூவிதழ் புனைந்திருக்கும் பொலிவிதோ
சென்னிறத்த புள்ளிமற்றும் சேர்ந்த நற்சிறப்பிதோ
14. கல்லிழைத்த கம்மல்போலக் காணுங்கண்கள் காக்ஷிபார்
மெல்லிதான தண்டுமொன்று மேலிருக்கும் மேன்மைபார்.
15. ஊசிபோன்ற கீலமென்ப துள்ளமைத்த ரகசியம்
கேசரக்கு ழாயுமத்தைக் கிட்டிநிற்ப ததிசயம்.
16. தண்டுசுற்றி யெண்ணிறந்த தந்திபோன்ற நூலின்மேல்
வண்டுமொய்க்கு மஞ்சள்மக ரந்தமுடும் பைகளே.
17. புறவிதழைக் கிள்ளிடில் பொலியும்பூவிற் பிஞ்சுமே
நிறமிகுந்த நல்விதைகள் நின்றுதோன்று மறையுளே
18. புற விதழ்கள் தம்மைப் புஷ்ப கோசமென்னப் புகலுவார்
சிறந்ததா மரைதனில் தனித்தனித் தெரிந்திடும்.
19. கோசமேயிப் புஷ்பமூடிக் கொண்டதை முன்காப்பது
வாசனைநி றையிதழ்கள் வண்டினத்தைச் சேர்ப்பது
20. செந்நிறத் துடன்மலர்கள் சேர்ந்திலங்கு பொன்னிறம்
பன்னிறத்த வண்ணப்பூச்சி பக்ஷியும் அழைத்திடும்.
21. கேசரக் குழாயினுட் புகுந்துகிண்டு மகரந்தம்
வாசமோடு பாசமாகி வன்கறுத் தறித்திடும்.
22. இம்மரங் கள்காய்ப்பதும் இனிப்புடன் கனிப்பதும்
செம்மையான அண்டகோசம் சேர்கறுத் தறித்தலால்.

திருவள்ளூர்.
10—5—1910 } J. DHARMARANGA RAJU.

கடிதம்

CORRESPONDENCE

நடுத்தெரு, குலசேகர பட்டணம்.
20—3—1910

ஐயா,

விவசாயதீபிகை 2-வது புத்தகம் 11-வது பிரதியில் ஆள் ஏற்றத்தில், ஒரே ஆள் அங்குமிங்கும் போய் வருவதால் தண்ணீரிறைக்கும்படியான சீர்திருத்தத்தை விவரித்து ஷை சாதனம் 20-அடிக்குள் பட்ட ஆழத்திற்கு மாத்திரம் உபயோகமென்றும் 100-அடி ஆழமானாலும் ஜலமிறைக்கும்படி செய்த ஏற்பாட்டின் விவரம் அடுத்த பிரதியில் சொல்லப்படுமென்றும் கண்டிருந்தது. ஷை விவரமுள்ள பிரதி என் கைக்குக் கிடைக்கவில்லை. ஆதலால் தங்களுக்குத் தெரிந்திருந்தால் தங்களுடைய பத்திரிகையில் அதன் விவரத்தைத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

வி. குமாரவேலு.

சப் அஸிஸ்ட்டன்ட் டைரக்டராயிருந்து காலஞ்சென்ற ம-௱-௱-ஸ்ரீ,

ராவ்பஹதூர் சி. கே. சுப்பராவ் அவர்கள், தம்முடைய வாழ்நாளெல்லாம் கஷ்டப்பட்டு ஒரு ஆள் அங்குமிங்கும் போய்வருவதால் தண்ணீர் இறைக்கும்படியான சாதனத்தைக் கண்டுபிடித்துவிட்டதாக நினைத்துக்கொண்டு அப்படி எழுதினார்கள். ஆனால்பிரத்தியட்சமாய்ப் போட்டுப் பார்த்தபோது பலனில்லாமல் போயிற்று. நமக்குத் தெரிந்தவரையில் மேற் சொன்னபடி தண்ணீரிறைப்பதற்குச் சீர்திருத்திய உபயோகமுள்ள சாதனம் நூதனமாகக் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

தண்ணீர் மூன்றடி உயரத்திற்குள் இறைப்பதானால் ஒணியாவது இறைகூடையாவது போட்டும், சுமார் ஐந்து அடி உயரத்திற்குள் இறைப்பதானால் கோதாவரி ஜில்லாவில் உபயோகிக்கும் காரம் என்னும் ஒரே ஆள் ஏற்றமும், ஐந்தடிக்குமேல் 20-அடி வரையில் ஏற்றமும், 20-முதல் 30- அடிவரையில் சாதாரண கவலையும் சுற்றுக்கவலையும், 30-அடிக்கு மேற்படுவதானால் பெல்லாரி ஜில்லாவைப்போல் ஆழத்திற்குத்தக்கபடி 2-அல்லது 3-ஜதை மாடுகள் கட்டிய மாட்டுக்கவலையும், விசேஷமான தண்ணீர் ஊற்றிருக்கும் பக்ஷத்தில் 20-ஏக்கருக்கு மேற்பட்ட விஸ்தீரணம் பாய்ச்சவேண்டுமானால் எண்ணெய் இயந்திரமுந் தான் சாதாரண தண்ணீர் இறைக்கும் கருவிகள்.

ப. ர்.

பெருமாள்கோவில் தெற்கு ரதவீதி
பாளையங்கோட்டை. 19—3—10

அன்பார்ந்தஐயா,

வைகாசிமாதத்தில் பிரசுரமான "கிருஷிகன்" பத்திரிகையில் இரு பூ நன்செய் நிலங்கள் உடையவர்களுக்கு ஓர் யோசனை என்னும் தலைப்பின் கீழ்சடம்புப் பயிர்சாகுபடியில் ஒருஏக்கர் நிலம்விதைக்க 2ரூபா சடம்பு விதை போதுமென்று எழுதியிருக்கிறீர்கள். திருநெல்வேலி ஜில்லா ஸ்ரீ வைகுந்தத்திற்கு சுமார் 5 மைல் தூரத்திலுள்ள மணக்கரை என்னும் கிராமத்தில் சலுப்பர்கள் குறுணிவிதைப்பாட்டிற்கு (அதாவது $7\frac{5}{8}$சென்டு) குறுணிவிதை (அதாவது 8 சேர் அல்லது $5\frac{5}{8}$-பட்டணம்படி) சடம்பு விதை விதைக்கிறார்கள். இந்தக்கணக்கின்படி ஒரு ஏக்கர் நிலத்தில் சடம்புவிதைக்க 13 ரூபா விதைவேண்டியதிருக்கிறதே. தாங்கள் சொல்வதற்கும் இவர்கள் போடுவதற்கும் அதிகவித்யாசம் இருப்பதால் தயவு செய்து இதைக் குறித்து விவரமாய்த் தெரிவிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

R. S. வடிவழகிய நம்பியாபிள்ளை
பென்ஷன்ட் சால்ட்சப் இன்ஸ்பெக்டர்

ஒரு ஏக்கர் நிலத்தில் 10-படி சடம்பு விதை விதைத்தால் போதுமானது. அதற்கு மேல் விதைப்பதெல்லாம் வீண்தான். திருநெல்வேலி ஜில்லாவில் நெல் சாகுபடியில் கூட குறுணி விதைப்பாட்டிற்கு குறுணிவிதை நெல் என்று சொல்வதும் அப்படியே போடுவதும் வழக்கமென்று நமக்குத் தெரியும். இப்போது ஒற்றைநெல் நாற்று நடுபவர்களெல்லாம் சுமார் ஒரு ஏக்கர் நிலத்திற்கு 6-படி நெல் தான் நாற்றுவிடுகிறார்கள். மணக்கரை கிராமத்தில் ரூபாய்க்கு சுமார்$5\frac{1}{2}$ படி சடம்புவிதை விற்கிறார்கள். 13-ரூபாய்க்கு வாங்கினால் $71\frac{1}{2}$-பட்டணம் படி வாங்கலாம். இந்த $71\frac{1}{2}$-படி விதையை ஒரு ஏக்கர் நிலத்தில் இடை தெரியாமல் பரப்ப முடியும். இப்படிச் செய்வதால் எந்த விதமான பிரயோஜனமுங்கிடையாது. சலுப்பர்கள் நார் எடுப்பதற்காகப் பயிர்போடுவ

தால் சடம்புப் பயிரைகிளைக்கவிடக்கூடாது என்னும் எண்ணத்துடன் நெருக்கமாய் விதைக்கிறார்கள். பயிர்க்கிளைத்தால் நார் நேராய்ப்போகாமல் கிளைத்த பக்கங்களிலெல்லாம்சென்று நாரெடுக்கும்போது அறுபட்டுப்போகும். நேரான நீண்ட நார்கிடைப்பதற்குச் செடிகள் கிளைக்காமல் நேராயும் உயரமாயும் வளரவேண்டியது அவசியம். தழையெருப் பயிருக்கு அப்படி நெருங்கி நீண்டுவளரவேண்டியதேயில்லை. குறைந்த செலவில் எவ்வளவு அதிகமான தழைஉண்டாக்கக்கூடுமோ அதையுண்டாக்க முயலவேண்டும்.கலக்கவிதைத்தால் செடிகள் செழித்துக்கிளைத்து நன்றாய் வளரும். அப்போதுஅதிகமான தழை யெருவும் கிடைக்கும். இது நாம் அனுபோகத்தால் சொல்லும் முறை ஆகையால் இதில் ஒருவரும் சந்தேகப்படவேண்டியதில்லை.

ப. ர்.

புஸ்தக விமர்சனம்

REVIEW OF BOOKS

"தென் இந்திய விவசாயம்" என்னும் மாதாந்தரப் பத்திரிகையின் பத்திராசிரியரும், விவசாயவிளக்கம் தென்னை, கரும்பு, நெல் என்னும் புஸ்தகங்களை வெளிப்படுத்தினவருமாகிய ம-ா-ா-ஸ்ரீ ஜி. இராஜகோபால் நாயுடவர்கள் இப்போது "மாம்பழம்" என்னும் புஸ்தகத்தை வெளிப்படுத்தி நமது பார்வைக்கு அனுப்பியிருக்கிறார்கள். Mr. நாயுடவர்கள் சைதாப்பேட்டை விவசாய காலேஜில் படிக்கும்போதே பரிட்சையில்மட்டும் தேறவேண்டும் என்னும் எண்ணத்துடனிருக்காமல் விவசாய விஷயத்தில் அதிக ஊக்கத்தையும் சிரத்தையையும் காட்டி வந்தார்கள். அதையறிந்த அதிகாரிகள் பரீட்சையில் தேறிய உடனே அவரை விவசாய இன்ஸ்பெக்டராக இந்த இராஜதானியில் நியமித்தார்கள். இவருடன் வேலைசெய்த அனேகரைப்போல் சம்பளம்வந்தால் போதுமானது என்றிராமல் இவர் படிக்கும்போது இருந்த ஊக்கத்தையும் சிரத்தையையும் நாளுக்கு நாள் விருத்திபண்ணிக் கொண்டிருந்தார். மேலும் இவர் சுமார் இரண்டு வருஷக்காலம் ரங்கோனிலும் வேலை செய்து அவ்விடத்திலுள்ள விவசாய முறைகளையும் அறிந்தவர்.

மற்றப்பத்திரிகைகளில்பிரசுரம்செய்யும் சமாசாரங்களைஎடுத்து சற்று கூட்டியோ அல்லது குறைத்தோ பிரசுரஞ்செய்துவிடும் சில பத்திராதிபர்களைப் போலல்லாமல் இவர் தாமே கஷ்டப்பட்டு வியாசங்களை எழுதி "தென் இந்திய விவசாயம்" என்னும் பத்திரிகையில் பிரசுரித்து வருகிறார். இவ்வளவு திறமையுடைய *Mr.* நாயுடவர்கள் எழுதிய "மாம்பழம்" என்னும் புஸ்தகமானது அதிக சிலாக்கியமாயிருக்குமென்று நாம் சொல்லாமலே நமது பீடிகையாலே எல்லாரும்யூகிக்கக்கூடும். நமது சந்தாதாரர்களெல்லாம் இந்த "மாம்பழம்" என்னும் புஸ்தகத்தையும் *Mr.* நாயுடவர்கள் எழுதியிருக்கும் மற்றப் புஸ்தகங்களையும் வாங்குவதுடன், அவர் பிரசுரித்துவரும் "தென் இந்தியவிவசாயம்" என்னும் மாதாந்தரப் பத்திரிகைக்கும் சந்தாதாரராகச் சேர்ந்து அவைகளின் பயனை அடைவதுடன் *Mr.* நாயுடவர்களுக்கு விவசாய விஷயத்திலிருக்கும் ஊக்கத்தை விருத்தி செய்து மேலும் மேலும் விவசாய புஸ்தகங்களை எழுதும்படி தூண்டுவார்களென்று நம்புகிறோம். இதன் விலை அணா 7.

ப. ர்.

குறிப்புகள்

NEWS AND NOTES.

இந்தியா விவசாய இலாகா இன்ஸ்பெக்டர் ஜெனரலான மெஸ்தர் மாலிசன் துரையவர்கள் இரண்டு வருஷக்காலத்துக்கு ரஜாபெற்று சீமைக்குப்போகிறார். அவருக்குப் பதிலாக பூசாவிவசாயக் கலா சாலைத்தலைவரான மெஸ்தர் கவென்ட்ரி துரையவர்களை நேமித்திருப்பதாகவும், அவருக்குபதிலாய் பூசாக்கல்விச் சாலைக்கு மெஸ்தர் பட்ளர் துரையவர்களைத் தலைவராய் நேமித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

அமெரிக்கா தேசத்தில் இவ்வருஷம் அனேக இடங்களில் பருத்திப் பயிருக்கு வெகுவாய் நஷ்டமுண்டானதாகத் தெரியவருகிறது. ஆகையால் இவ்வருஷம் இந்தியாதேசத்துப் பருத்திக்கு விலை சீக்கிரத்தில் அதிகப்படுமென்று நினைக்க ஏதுவாகிறது.

இம்மாதத்தில் அனேக ஜில்லாக்களில் காலக்கேழ்வர்கு நாற்றுவிட்டு அடுத்தமாதத்தில் நடுவார்கள. அப்படி நடும்போது நாம் சௌமிய வருஷம் தைமாதச் சஞ்சிகையில் வெளியிட்டியிருக்கும் ஏற்பாடுகளைச் செய்வது உத்தமம்.

நெல் சாகுபடி செய்யுமிடங்களில் இம்மாதம் கார் நாற்றுவிட்டு அடுத்த மாதம் நடுவார்கள். அப்படி நடும்போது நாம் சென்ற சௌமியவூ ஆனிமீ 1வ பிரசுரமான சஞ்சிகையில் வெளியிட்டிருக்கும் விதமாய் ஒற்றைநாற்று நடுகை செய்வது உத்தமம் என்பதை வற்புறுத்துகிறோம்.

இம்மாதத்தில் எங்கேயாவது மழைபெய்வதாயிருந்தால், நன்செய் நிலங்களில் இப்போது சடம்பு விதைத்துப் பயிராக்கி பசுந்தாள் எருவாக உபயோகிக்கலாம். இது முக்கியமான காரியமாகையால் இவ்விஷயத்தைத் திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லவேண்டியதாய் நேரிடுகிறது.

சைதாப்பேட்டை விவசாயக் கல்விச்சாலைத் தலைவராயிருந்து சீமைக்குப் போயிருக்கும் மெஸ்தர் கீஸ்துரையவர்கள் தற்காலத்தில் இங்கிலாந்துக்கடுத்தஜெர்சித்தீவில் குடியிருப்பதாகவும்அங்கேஒரு ஏக்கர்நிலத்திலிட்ட உருளைக்கிழங்குப் பயிரில் சுமார் 1850-ரூபாய் கிடைத்ததாகவும், அதன் பின் அதே நிலத்தில் தக்காளி பயிரிட்டு அந்தப் பயிரிலும் தக்கலாபம் கிடைத்ததாகவும் எழுதியிருக்கிறார்கள். இவ்விதமாக ஒரு ஏக்கர் நிலத்தில் ஒரு வருஷத்தில் சுமார் 2000-ரூபாய் கிடைக்கிறதென்று தெரியவருகிறது. இந்தத் தேசத்திலும் நிலங்களுக்குச் சரியானபடி எருவிட்டுச்சத்துண்டாக்கிப் பயிரிட்டால் இதேவிதமான இலாபம் கிடைக்கக்கூடும்.

கோயம்பத்தூர் விவசாயக் கலாசாலைத் தலைவராயிருந்து சீமைக்குப் போயிருக்கும் மெஸ்தர் ஷெப்பர்சன் துரையவர்கள் பீட்டர்ஸ்பரோ சந்தையில் ஒருவகையான சிவப்புச்சோளமும் கடலையும் விலைக்கு விற்கப்பட்டு வருவதாயும், அதைப்பற்றி விசாரித்ததில் இந்தியாவிலுள்ள கராச்சி துறைமுகத்திலிருந்து இங்கிலாந்துக்கு இந்தத் தானியங்கள் ஏற்றுமதியானதாக வெளியானதாயும்; ரூ. 1-க்கு 7 பட்டணம் படி வீதம் வியாபாரிகள் விற்பதாகவும்எழுதியிருக்கிறார்கள். அங்குள்ளகிருஷிகர் இந்தத்தானியங்களை வாங்கிக்கால்நடைகளுக்கு ஆகாரமாக உபயோகிக்கிறார்களாம். இனி இத்தேசத்திலிருந்து சோளமும் கடலையுங் கூட அயல்தேசங்களுக்கு ஏற்றுமதியாய்விடும்போலிருக்கிறது. அப்போது நமது தேசத்து ஜனங்கள் பாடு என்னவாகுமோ தெரியவில்லை. விவசாய அபிவிர்த்தி ஒன்றுதான் இவைகளுக்கெல்லாம் நிவர்த்தி.

இனிய தமிழ் நாவல்கள்

	ரூ.	அ.
ஜடாவல்லவர் முதற்பாகம் ...	0	8
ஷை இரண்டாம்பாகம் ...	0	10
(இரண்டுபாகமும் சேர்ந்து)	1	0
* விஜயலெட்சுமி ...	0	10
* சீதாராம் ...	1	0
* வசீகரி (From East Lynne)	1	0
* இராமாயண வினாவிடை	0	12
* மங்களாம்பாள் ...	0	8
ஞானம்பாள் ...	0	6
* சுப்பிரமணிய தோத்திரக் கொத்து உருவப்படத்துடன்	0	3
ராஜாம்பாள் } துப்பறியும் நாவல்கள்	0	12
* சந்திரகாந்தா } துப்பறியும் நாவல்கள்	0	12
* பவானந்தர் ...	0	8
சந்திரசேகரன் ...	0	8
ஆனந்தமடம் ...	0	8
போஜநாடகம் (16-படங்கள்)	1	8
புருஷோத்தமன் ...	0	10
மங்கைக்கரசி ...	0	12
சுந்தரன் ...	0	12
லீலா (From Reynolds) ...	0	12
சாரதாம்பாள் ...	0	8
வத்ஸலா ...	0	8
வசந்தசேனை ...	0	4
காணாமற்போன கண்மணி ...	0	3
பிரேமகலாவதீயம் ...	0	12
கமலனீகலஹம்சம் ...	0	8
குணசீலன் ...	0	10
வாசந்திகா ...	0	8
காமாக்ஷி ...	0	8
பங்கஜாக்ஷி ...	0	8
அழகம்மாள் ...	0	12
* மகாபாரத வினாவிடை ...	0	12
* ஷை இரண்டாம் பாகம் ...	0	12
பிரதாபமுதலியார் சரித்திரம்	1	0
சுந்தரிமனோகரன் ...	0	12
விவேகாநந்த ஸ்வாமி உபந்நியாசம் கர்மயோகம் ...	0	8
ஷை ஞானயோகம் ...	0	8
பகவத்கீதை (3 பக்ஷியம்) ...	1	0
ஷைபாராயணத்திற்கு ...	0	8

* புதிய புஸ்தகங்கள்.

	ரூ.	அ.
* திருக்குறள் வசனம் ...	1	0
* சுகதேவி ...	0	8
* விவேகாநந்த விஜயம் ...	1	4
* சபலை ...	0	8
அரிச்சந்திரன் ...	0	4
* கோமளம் காஞ்சியாத்திரை	0	8
* லெக்ஷிமி ...	0	8
* ஆனந்தசுந்தரி ...	0	12
மாலிகாபூஷணி ...	0	10
கனகவல்லி ...	1	0
தமயந்தி (Drama) ...	0	9
அநூமான்சிங் ...	0	12
500 பழமொழிகள் ...	0	2
லலிதா (நவீன நாடகம்) ...	0	10

மகா-ா-ா-ஸ்ரீ, ப. சம்பந்த முதலியார் B.A.B.L. இயற்றிய

	ரூ.	அ.
அமலாதித்யன் (Hamlet) ...	1	0
லீலாவதி சுலோசனை ...	0	12
மனோகரன் ...	0	12
இரண்டு நண்பர்கள் ...	0	12
சத்ருஜித் ...	0	12
* காதலர் கண்கள் ...	0	12
கள்வர் தலைவன் ...	0	8
யயாதி ...	0	8
சாரங்கதரன் ...	0	8
வேதாள உலகம் ...	0	8
காலவரிஷி ...	0	8
* ரத்னாவளி (Ratnavali) ...	0	12
* பேயல்ல பெண்மணியே ...	0	8

பண்டித நடேச சாஸ்திரியார் இயற்றிய

	ரூ.	அ.
தீனதயாளு ...	0	8
மதிகெட்ட மனைவி ...	1	0
மாமி கொலுவிருக்கை ...	0	8
தலையணை மந்திரோபதேசம்	0	8
கோமளம் குமரியானது ...	0	12
திக்கற்ற இருகுழந்தைகள் ...	1	4
முத்திரா ராக்ஷஸம் ...	0	4
மிருச்சகடி ...	0	4
வேணிசம்ஹாரம் ...	0	3

எஸ். ஜி. ஐயர் அண்டு கம்பெனி,

திருவல்லிக்கேணி.

ஆனந்த ராமாயணம்

இதுவும் வான்மீகி மகாரிஷியால் வடமொழியில் எழுதப்பட்டது. இதைத் தமிழில் மொழிபெயர்த்துப் பன்னிரண்டு சஞ்சிகைகளாக வெளியிடுகிறோம். இதில் வான்மீகி ராமாயணத்தில் இல்லாத அனேக விஷயங்கள் அடங்கியுள்ளன. ஸ்ரீராம லக்ஷ்மணருடைய ஜனனமும் வளர்ப்பும், சீதா தேவியினுடைய ஜனனமும், அத்தேவிக்குப் பலபெயர் வந்ததற்குக் காரணமும் விளக்கி யிருப்பது படிப்பதற்கு வெகு இனிமையா யிருக்கும். ஆனந்த ராமாயண மென்ற இதன் பெயருக்கொத்தபடிப் படிப்போர் மனதிற்கு உற்சாகமும் ஆனந்தமும் உண்டாக்கு மென்பதில் தடையில்லை. இது வரையில் தமிழ்ப்பாஷையில் வெளிவராதது. ஆகையால் நமது அபிமானிகள் ஒவ்வொருவரும் வாங்கி வாசித்துப் பயன்படும்படிக் கேட்டுக்கொள்ளுகிறோம். இப்புஸ்தகம் ஒன்பது காண்டங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றது.

காண்டங்களின் விவரம்.—1. ஸாரகாண்டம் 2. யாத்ராகாண்டம், 3 யாககாண்டம் 4. விலாஸ காண்டம், 5. ஜன்ம காண்டம், 6. விவாக காண்டம், 7. ராஜ்ய காண்டம், முதல்பாகம், இரண்டாம்பாகம், 8. மனோகர காண்டம், 9. பூரணகாண்டம். ஒவ்வொரு சஞ்சிகையிலும் சித்திரப்படமொன்று அமைத்து வெளியிடப்படும். சந்தா விவரம்:—

பத்து பாரம் கொண்ட சஞ்சிகை ஒன்றுக்குச் சந்தா	0	6	0
மூன்று மாதத்துக்கு	1	0	0

இப்புத்தகம் பன்னிரண்டு சஞ்சிகையில் முடிவாகும். தபாற் கூலி வேறு. 4-வது சஞ்சிகைகள் வெளியாய்விட்டன.

வேண்டுவோர் கீழ்கண்ட விலாசதாருக்கு எழுதி ரிஜிஸ்தர் செய்து கொள்ளவும்.

ஸ்ரீமத் பாகவதம்

ஸ்ரீமத் பாகவதமானது சதுர்வித புருஷார்த்தங்களுள் பிரதானமான மோக்ஷ சாம்ராஜ்யப்பேறு பெறுவதற்கு இன்றியமையாத சாதனமாகிய பகவத்பக்தி புகட்டத்தக்க அரிய நூலென்பது யாவரும் அறிந்த விஷயம். இத்தகைய கிரந்தம், தமிழ், சமஸ்கிருதாபிமானிகளாகிய நம்மவர் ஒவ்வொருவர் கிருகத்திலுமிருப்பது அவசியமென்பதை யுத்தேசித்து ஸ்ரீதரீய வியாக்கியானத்துடன் மூல சுலோகமும், அந்த மூலத்துக்கேற்பத் தமிழ் மொழிபெயர்ப்பும் அச்சிட்டு, சஞ்சிகைரூபமாக வெளிப்படுத்த முதலில் தசமஸ்கந்தத்தை ஆரம்பித்தோம். இப்பொழுது 8-சஞ்சிகைகள் வெளியாயிருக்கின்றன. ஒரு சஞ்சிகை ராயல் 10-பாரங்கொண்டது (80-பக்கம்). ஒவ்வொரு சஞ்சிகையிலும் சித்திரப்படமொன்று அமைக்கப்பட்டிருக்கும்.

சந்தா விவரம்

மாதம் 1-க்கு 0-7-0. மூன்று மாதத்திற்கு 1-4-0. தபாற் கூலி வேறு.

எ. வி. ஐயர் அண்டு கம்பெனி,
117, பெரியதெரு திருவல்லிக்கேணி,
சென்னை.

A. V AIYER & Co.,
Book Sellers & Publishers,
Triplicane, Madras.

குறிப்பு:—இதைப்பற்றி ஆர்டர் செய்கிறவர்கள் இப்பத்திரிகையை குறிப்பிடவும்.

கிராம உத்தியோகஸ்தர்களைக் குறித்த சட்ட புஸ்தகங்கள்

வினாவிடை 1, 2-வது பாகங்கள்

இதன் 1-வது பாகத்தில் கிராம உத்தியோகஸ்தர்களுடைய அந்தஸ்து முதலியவைகளும், 2-வது பாகத்தில் கிராம முன்சீபு கோர்ட்டு நடவடிக்கைகளுக்குச் சம்மந்தப்பட்ட 1889-ம் ௵த்து 1-வது ஆக்டும், கிராமபஞ்சாயத்தைக்குறித்த 1816-ம் வருஷத்து 5-வது ரெகுலேஷனும், நிலம் தண்ணீர் விவாதங்களின் பஞ்சாயத்தைக் குறித்த 1816-ம் ௵த்து 12-வது ரெகுலேஷனும் அடங்கியுள்ளது.

ஜில்லா நிலையான உத்திரவுகளில் முக்கியமானவற்றையும், இந்து தேசத்து முத்திரைக் கடுதாசி ஆக்டு, கோர்ட்டு கட்டண ஆக்டு, சாக்ஷிஆக்டு, கால நிர்ணயச்சட்டம் முதலியவைகளில் கிராமக்கோர்ட்டு நடவடிக்கைகளுக்குசம்மந்தப்பட்ட பாகங்களை அவ்வவற்றிற்குப் பொருத்தமான இடங்களில் அமைத்தும், பாஷை நடை கடினமாயிருக்கிற விடங்களில் சாதாரண வார்த்தைகளால் அர்த்தஞ் சொல்லியும், படிப்போருக்கு விஷயங்கள் நன்றாய் மனதில் பதியும்படி உதாரணங்கள் எடுத்துக்காட்டியும் வினாவிடை ரூபமாக எழுதப்பட்டிருக்கிறது.

கிராமக் கோர்ட்டில் தாக்கல் செய்யவேண்டிய சகலவிதமான பிளெயண்டுகள், மனுக்கள், மேற்படி கோர்ட்டில் உபயோகிக்கப்படவேண்டிய நமூனாக்கள், கணக்குகள், மேற்படி கோர்ட்டார் பிறப்பிக்கவேண்டிய சம்மன்கள், நோட்டீசுகள், கட்டளைகள், டிக்ரிகள் இவைகளுக்கு மாதிரிகளும் எழுதப்பட்டிருக்கின்றன. இதுவரையில் இம்மாதிரியான புஸ்தகம் வெளிவந்ததே இல்லை. கிராமமுன்சீபு கோர்ட்டு நடவடிக்கைகளுக்காக எழுதப்பட்ட பலவகைப் புஸ்தகங்களில் சட்ட ஞானமுள்ள கனவான்களின் நல்ல அபிப்பிராயத்தைப் பெற்றவைகளுமில்லை.

இந்தப் புஸ்தகத்துக்கோ இதுவரையில் கோயமுத்தூர் ஜில்லா கலெக்டர் கனம் H. F. W. கில்மேன் துரையவர்கள், ஒரு பென்ஷன் சப்ஜட்ஜு, ஒரு ஹைகோர்ட்டு வக்கீல், ஒரு டிஸ்டிரிக்டு கோர்ட்டு வக்கீல், இரண்டு தாசீல்தார்கள் ஆகிய கனவான்களின் நற்சாட்சிப் பத்திரங்கள் கிடைத்திருக்கின்றன.

இந்தப் புஸ்தகத்தின் காபிஒன்றை அனுப்பப் பெற்ற கனம்பொருந்திய சென்னை ரிவினியூ போர்டார் அவர்களும் சில ஜில்லா கலெக்டர்களும் வந்தனத்துடன் பெற்றுக் கொண்டதாகக் கடிதங்களை அனுப்பியிருக்கிறார்கள்.

கிராம முன்சீபுகள், கர்னங்கள், கிராம உத்தியோகஸ்தர்களைக் குறித்த ஸ்பெஷல் டெஸ்டு பரீக்ஷைக்குப் படிக்கும் வித்தியார்த்திகள், கிராம முன்சீபுகோர்ட்டுகளில் வக்கீல்களாகத்தொழில்புரிகிறவர்கள், மேற்படிகோர்ட்டுகளில் வழக்குகள் நடத்தவேண்டிய வியாபாரிகள், லேவாதேவிக்காரர்கள், மிராசுதார்கள் முதலியவர்களுக்கு மிகவும் அவசியமானது.

220-பக்கங்களுள்ளதாய் நல்ல எழுத்துக்களில் 20-பவுன் கிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டு, கெட்டி அட்டையில் பைண்டு செய்யப்பட்ட இப்புத்தகத்தின் விலை தபாற்கூலி உள்பட ரூ. 1—4—0. ஒரே தடவையில் 10-புஸ்தகங்கள் வாங்குவோருக்கு ஒரு புஸ்தகம் இனாம். வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதினால் வி. பி. யில் அனுப்பப்படும். எழுதுவோர் தயவுசெய்து இப்பத்திரிகையின் பெயரையும் எழுதவேண்டும்.

K. N. ரங்கய்ய கவுண்டர், கிராமமுன்சீபு, கம்புளியம்பட்டி,
விஜயமங்கலம், போஸ்ட், கோயமுத்தூர் ஜில்லா.

உயர்ந்த நான்கு தங்கப்பதக்கங்களும் முதல்தரமான
அனேக யோக்கிதா பத்திரங்களும் வெகுமான மளிக்கப்பட்டன

ஆயுர்வேத மார்த்தாண்ட, பிஷங்மணி
பண்டித டி. கோபாலாசாரியார் எ. வி. எஸ்.

பிரின்ஸிபால் எஸ். கே. பி. டி. ஆயுர்வேதிக் காலேஜ், அவர்களால்
சாஸ்திரமுறைப்படி நேரில் செய்யப்பட்ட ஆயுர்வேத ஔஷதங்கள்

கற்பூராத்யரிஷ்டமும்,
விஷூசிஸஞ்ஜீவினி மாத்திரைகளும் } விலை அணு 12.

இவை காலரா என்றவியாதியைத் தடையின்றி நிர்மூலமாக்கும். க்ஷணத்தில் வாந்திபேதியைநிறுத்திவிடும். ஜன்னியைக்கொஞ்சமும் தலையெடுக்கவொட்டாது. மூத்திரத்தை வரச்செய்யும். வியாதி எந்த ஸ்திதியிலிருந்தாலும் கண்டிக்கும்.

(2) அசோகவடி:— புட்டி 1-க்கு விலை அணு 12. ஸ்திரீகளுக்குப் பகிஷ்டையாகும் சமயத்தில் ரஜஸ் வெள்ளமாய்ப்போதலையும், வயிற்றுவலி, காலெரிவு, யோனிப்புற்று கருப்பையிலிருந்து சீ யொழுகல் முதலியவற்றையும், கண்டிக்கக்கூடிய அமிருத சஞ்ஜீவினி.

(3) கேஸப்பிரஸாதன தைலம்:— புட்டி 1-க்கு ரூ 1—0—0. ஒவ்வொருவருடைய வீட்டிலிருக்கத்தகுந்த பரிமள கூந்தற்தைலம். கூந்தலை நன்றாய் வளரச்செய்யும். கண்களின் எரிச்சலைத்தணிக்கும்.

(4) வஜ்ரதந்த சூர்ணம்:— டின் 1-க்கு அணு 4. இந்தச் சூர்ணத்தினாலே பற்களைத் தேய்த்தால் வாய் நாற்றம், புண்கள், பற்கள் அசைதல், ஈறுகள் தடித்தல், பற்களில் ரத்தமும், சீயும் ஒழுகிக்கொண்டிருத்தல் முதலியவைகளைப் போக்கடித்து, தந்தமாம்சங்களுக்கு மிகுந்த பலத்தை உண்டுபண்ணி வாய்க்கு நல்ல வாசனைகொடுக்கும்.

(5) சுகவிரேசனவடி:— புட்டி 1-க்கு அணு 8. இந்த மருந்தைக் கொஞ்சகாலம் வரைக்கும் உபயோகித்துவந்தால் மலக்கட்டு, அக்கினி மாந்தம், அதிகபித்தம், வயிற்றில் எரிச்சல், வயிற்றுவலி, தலைசுழற்றல், மூலவியாதி அபான வாயுவு தோஷங்கள், காமாலை முதலியவைகளைப் போக்கடிக்கும்.

ஆயுர்வேத மார்த்தாண்ட, பிஷங்மணி
பண்டித டி. கோபாலாசாரியார் எ. வி. எஸ்.
ஆயுர்வேதாச்சிரமம்,
55, ஆசாரப்பன் தெரு,
ஜார்ஜ்டவுன், சென்னை.

டெலிகிராம் அட்ரஸ் "பண்டிட்" மதிராஸ்.

P. SUBBA ROY'S

Wonderful Auyurvedic Medicines.

பி. சுப்பராய், பரங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.

தயவுசெய்து தங்கள் சினேகிதர்களுக்கு வாசிக்கக் காண்பியுங்கள்

பி. சுப்பராயின் அபூர்வ ஆயுர்வேத ஔஷதங்கள்.

23. "கேசஸுவாசனி."—உசிதமான சீமை வாசனை சாமான்கள் சேர்த்துச் செய்யப்பட்ட இத்தைலத்தால் கூந்தல் செழிப்பாகவும், நெருக்கமாகவும், கருப்பாகவும் வளரும். கண்கள் குளிரும், தலைநோய் போகும். மூளையைப் பலப்படுத்தும், மிகவும் வாசனையுள்ள தைலம். சீசா 1-க்கு ரூபா 1. வி. பி. செலவு 1-அல்லது 2-சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

24. "இரக்ஷாமிர்தம்."—தாவரவர்க்கத்தைச்சார்ந்த அநேக அபூர்வ மூலிகைகளால் செய்யப்பட்ட இச்சூர்ணம் காபி, தேயிலைக்குப் பதிலாக உபயோகப்படுத்துவதற்காகவே தயார் செய்யப்பட்டிருக்கிறது. காபி தேயிலைக்குள்ள துர்குணங்கள் இதற்கில்லை. காபி பொடியை எவ்விதம் உபயோகிக்கிறோமோ அவ்விதமாகவே இதையும் உபயோகிக்க மிகவும் ருசியான பானமாகும். அரைக்குழந்தை முதல் விருத்தாப்பியர்கள் வரையில் எல்லோரும் உபயோகிக்கலாம். சுரம், ஜன்னி, கர்ப்பம், பிரசவம், காலரு முதலிய காலங்களில் ஷை சூரணத்தின் கஷாயத்தைப் பாலுடன் அல்லது பாலைச் சேர்க்காமல் சமயத்திற்குத் தக்கபடி உபயோகிக்க ஜனங்களை நோய்களிலிருந்து குணப்படுத்துவது மன்னியில் நோய்வராமல் கார்க்கும். பித்த வாயு, காசம், க்ஷயம், அஜீரணம், மலச்சிக்கல், தலைவலி முதலியவைகளைப் போக்கும். இரத்தத்தைச் சுத்திசெய்து தாதுவிர்த்தியையும், தேக ஆரோக்கியத்தையும் தரும். அக்கினி மாந்தமுள்ளவர்களுக்கும், மது மூத்திரம், அதிமூத்திரரோகிகளுக்கும் அருமையான வஸது. இதை வழக்கமாய் உபயோகித்து வந்தால் மதுமூத்திர ரோகிகளின் நீரிலுள்ள தித்திப்பையும், நீரின் அளவையும் குறைத்து மூத்திர ரோகத்தை அடியோடு குணமாக்கும். தேகத்தின் உஷ்ணத்தைச் சாந்தி செய்யும். மூளையைப் பலப்படுத்தி ஞாபக சக்தியை அதிகப்படுத்தும். மாணாக்கர்கள், வக்கீல்கள், உத்தியோகஸ்தர்கள் பகைக்கத்தக்க குணமுள்ள காபி தேயிலையை விட்டுவிட்டு இதை உபயோகிக்க அருமையான சூர்ணம். டப்பா 1-க்கு விலை அணா 6, வி. பி. செலவு அணா 3 பிரத்தியேகம்.

25. "சர்பத்துக்கள்."—தாமரை புஷ்பம், திராக்ஷைப்பழம், கன்னாரிவேர், ரோஜாபுஷ்பம், வாழைப்பழம், எலுமிச்சம்பழம், கிச்சிலிப்பழம், பாதம், மாதளைப்பழம், அன்னாச்சிப்பழம், துருஞ்சிப்பழம், கொமட்டிபழம், சீமை இலந்தைப்பழம், இஞ்சிசர்பத்துக்கள். ஷை சர்பத்துக்கள் பழவகைகளின் சத்துக்களால் செய்யப்பட்டிருக்கின்றன. ஒவ்வொன்றையும் துளிகள் கணக்காகவே உபயோகிக்கவேண்டும். ஒரு சேர் குளிர்ந்த ஜலத்திலாவது சோடாவாடரிலாவது சுமார் 5 துளிகள் சேர்த்தால் மிகவும் இனிப்பாகவும் எந்தப் பழ சர்பத்து உபயோகிக்கப்பட்டதோ அந்தப் பழத்தின் மதுரமான வாசனையோடுங்கூடிய சர்பத்தாகும். ½-அவுன்சு சீசாக்களில் விற்கப்படும், இச்சிறு சீசாவிலுள்ள சர்பத்து 50 சேர் குளிர்ந்த ஜலத்துடனாவது

சோடாவாட்டரோடாவது சேர்த்தால் 50 சேர் உசிதமான சர்பத்தாகும். அரை அவுன்சுள்ள சீசா 1-க்கு விலை அணா 8, வி. பி செலவுகள் 1-முதல் 3-சீசாக்கள் வரையில் அணா 5 பிரத்தியேகம்.

26. "சுகந்த மூக்குத்தூள்."—இந்த மூக்குத்தூள் மிகவும் நேர்த்தியான முறையால் செய்யப்பட்டிருக்கிறது. வெகு இன்பமான வாசனையுடையது. ஒருநாளைக்கு ஒரு மனிதன் எவ்வளவு மூக்குத்தூள் உபயோகிப்பானோ அவ்வளவு சாதாரண புகையிலை மூக்குத்தூளுடன் நம்முடைய சுகந்த மூக்குத்தூளில் ஒரு சிட்டிகை எடுத்து நன்றாய்க் கலந்துகொண்டால் அந்தத்தூள் முழுவதும் அதிக மனோரம்மியமான வாசனையுள்ள மூக்குத்தூளாகிவிடும். கடைகளில் விற்கும் சாதாரண மூக்குத்தூளுடன் ஒரு சிட்டிகை சேர்த்தாலே போதுமானது. தனிமையாக உபயோகப்படுத்துவது அனாவசியம். இத்தூள் சேர்ந்த மூக்குத்தூள் கெடாமல் நெடுநாள் சுகந்த பரிமளத்துடன் காரம் போகாமலிருக்கும். தலைவலி, பீனிசம், சலதோஷம், நாசியிலிருந்து நீர்வடிதல், மண்டைக்குற்று, நீர்பீனிசம், நாசியில் துர்நாற்றம், மயக்கம் முதலியது தீரும். இதில் நவச்சாரம் சேரவில்லை. வழக்கமாக மூக்குத்தூள் உபயோகிப்பவர்களிடத்திலுள்ள துர்நாற்றத்தை நீக்கிச் சதா கம கமவென்று பரிமளத்தை வீசிக்கொண்டேயிருக்கும். இத்தூள் உபயோகித்தால் அடிக்கடி நசியம்போடுகிற வழக்கத்தை நாளுக்குநாள் குறைத்துக் கடைசியில் சிலர் தூள்போடும் அப்பியாசத்தையே முற்றிலும் விட்டுவிடும்படிக்குச் செய்யும். ஒரு சீசாவிலுள்ள சுகந்த மூக்குத்தூள் சுமார் ஒருமாதத்திற்குப் போதுமானது. சீசா 1-க்கு விலை அணா 4. வி. பி. செலவு 1-முதல் 3-சீசாக்கள் வரையில் அணா-3 பிரத்தியேகம், 4-முதல் 6-சீசாக்கள் வரையில் வி. பி. செலவு அணா 5-பிரத்தியேகம், 7-முதல் 12-சீசாக்கள் வரையில் வி. பி. செலவு அணா 7-பிரத்தியேகம்.

27. "அசோக கிருதம்."—ஸ்திரீகளுக்கு மாதந்தோறும் பகிஷ்டை சரிவர உண்டாகாதிருத்தல், அகாலங்களில் பகிஷ்டையாகுதல், பகிஷ்டை காலங்களில் வெகு கடினமான சூலைநோயுண்டாகுதல், பகிஷ்டையாகும் சமயத்தில் வயிற்றுவலி, காலெரிவு, தேகங்கனத்தல், வாந்தியாகுதல், பகிஷ்டையாகும் சமயத்தில் ரஜஸ் அதிகமாகப் போகுதல் முதலிய ரஜா தோஷங்களும், யோனி சுருக்கும், யோனிப்புற்று, கருப்பையிலிருந்து சீயொழுகுதல், எப்போதும் கருப்பையிலிருந்து வெண்மையான நீர் ஒழுகுதல், யோனி ரணங்கள் இவை முதலிய ஸ்திரீ சம்பந்தமான சகல ரோகங்களையும் போக்குவதில் இது நிகரற்ற ஔஷதம். சூதக சூலைரோகங்களுக்கும் மற்றும் அனேக யோனிசம்பந்த ரோகங்களுக்கும் அற்புதமாய் நன்மை செய்யும். விலை சீசா 1-க்கு ரூபா ஒன்று. 1-அல்லது 2 சீசாக்கள் வரையில் வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

28. "பிரஹத் சந்திரோதயமகாத்வஜம்."—தாது நஷ்டம், பலஹீனம், புருஷத்தன்மை யில்லாமை, இந்திரிய நஷ்டம், சொர்ப்பன ஸ்கலிதம், புத்தி பிரமை, மறதி, விந்துக்ஷீணம், சீக்கிர ஸ்கலிதம் முதலிய பற்பல ரோகங்களை வேருடன் கொன்று அபரிமிதமான புருஷத்தன்மையைத் தரும். சந்தேகமில்லை. இம்மருந்து சாப்பிட தொடங்கினநாள் முதல் நாளுக்கு நாள் இதன் சிறந்த குணத்தைக்காட்டும். பாலியத்தில் சிற்றின்பத்தில் நுழைந்து புருஷத்தன்மையைச் சீக்கிரத்திலிழந்து பரிதவிப்போர்கள் இம்மருந்து சாப்பிட்டுவந்தால் வெகு சீக்கிரம் பூரண புருஷத்தன்மையைத் திரும்பப்பெற்றுச் சுகிக்கலாம் என்பது நிச்சயம். ஏழு நாளைய ஔஷதம் ரூபாய் 3, வி. பி. செலவு அணா 5 பிரத்தியேகம்.

பி, சுப்பராய், பரங்கிப்பேட்டை,

தென்னாற்காடு ஜில்லா.

இரங்கோன்

இரஞ்சித போதினி

எப்பொழுதும் சித்திரப்படங்களோடு பிரகாசிப்பதுடன் அறிவைப் பரவச்செய்து ஆனந்தத்தை விளைவித்து யாவர்க்கும் சுகசெல்வ நன்மைகளையும், சுகிர்தபாக்கிய பொக்கிஷத்தையும், நீடூழி பெருகுவிக்கும் ஓர் நவீன மாதாந்தப் பத்திரிகை. இதிலடங்கிய விஷயங்களாவன:—

சுதேச சுகாதார சங்கத்தின் மெம்பர்கள் எழுதும் வியாசங்கள், மனோவசிய சாஸ்திரம், சுகாதாரவிளக்கம், அமெரிக்க சாஸ்திர ஆராய்ச்சி சங்கத்தினர் கண்டுபிடித்த நூதன விஷயங்கள், வைத்தியக்குறிப்பு, பாலர் பரிபாலனம், ஸ்திரீகளுக்குரிய விஷயங்கள், விநோத விசித்திர விஷயவிளக்கம், அதிரசமஞ்சரி, ஹிதோபதேசம், பழமொழி, விடுகதை வினுக்கள், உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தமானங்கள், ஜீவாதார மந்திரோபதேசம் முதலிய அரிய பெரிய பல விஷயங்கள்.

இதன் வருஷசந்தா ரூபா 2. தேவையானவர்களுக்கு மாதிரிப்பிரதி அனுப்பப்படும்.

மானிட மர்மசாஸ்திரம்

ரூபாய் 300 இனும்

விவரம் பின் குறிப்பிட்டிருக்கும் ஒவ்வொரு புஸ்தகத்திலும் கண்டுகொள்ளலாம்.

		அணு
1.	மானிட ஜீவியத்தின் பலபருவங்கள் (ஓர் உபந்நியாசம்) 23 படங்களுடன்	6
2.	இல்லற இன்ப இரகசியம் (29 படங்கள்)	12
3.	ஜனனேந்திரியங்களின் அமைப்பும் அற்புதங்களும் (46படங்கள்)	12
4.	மாதாவின் மாகூிமை (18 படங்கள்) ...	6
5.	சிசுவுற்பத்தி (34 படங்கள்)	6
6.	கர்ப்பக்கால சுகாதாரவிதிகள் (8 படங்கள்)	4
7.	கர்ப்பக்கால நோய்களும் பரிகாரங்களும்	6
8.	மருத்துவசாஸ்திரம் (8 படங்கள்)	8
9.	சிசு பரிபாலனம் (15 படங்கள்)	4
10.	ஆண், பெண், மலட்டிற்கு நிவாரணம் (5 படங்கள்) ...	8
11.	ஆண்மையின்அழிவும் அதன்மீட்சியும் வாலிபருக்கு (6 படங்கள்)	8
12.	சமயோசித சஞ்சீவி	2

தபாற் செலவு ஒரு அணு

மேற்குறித்த புஸ்தகங்களுக்கு ஒரே தடவையில் ஆர்டர் அனுப்புகிறவர்களுக்குத் தபாற்செலவு உள்பட ரூபா 5-க்கு அனுப்பப்படும்.

12. புஸ்தகங்களையும் ஒன்ருகச்சேர்த்து உயர்ந்த காலிகோ பயிண்டு செய்து தங்க எழுத்துக்கள் பதித்த பிரதி ஒன்றுக்குத் தபாற் செலவு உட்பட ரூபா 5-8-0.

மானேஜர்,

"இரஞ்சித போதினி ஆபீஸ்"

11, 12 கமிஷனர் ரோட்,

இரங்கோன்.

‘தென்னிந்திய விவசாயம்’

32 பக்கங்களுடன் மாதந்தோறும் வெளியாகிறது.

வருஷ சந்தா தபால் உள்பட ... ரூ 3 0 0

	ரூ.	அ.	ப.
விவசாய விளக்கம்	1	4	0
தென்னை	1	0	0
கரும்பு	1	0	0
நெல்	1	0	0
மாம்பழம்	0	7	0

தபால் செலவு பிரத்தியேகம்.

ஜி. இராஜகோபால் பென்ஷன், விவசாய இன்ஸ்பெக்டர்,

தென்னிந்திய விவசாயம்,

வண்ணாரப்பேட்டை, சென்னை.

The South Indian Mills Co., Ltd.

TINNEVELLY.

தென் இந்திய மில்ஸ் கம்பெனி (லிமிடெட்)

திருநெல்வேலி.

மூலதனம் ரூ. 900000.

ரூ. 100 பெறுமான சாதாரண பங்குகளுக்கு விண்ணப்பம் இப்போது வாங்கப்படுகிறது.

விவரங்கள் திருநெல்வேலி ஆபீசுக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். பருத்திக்கொட்டையிலிருந்து எடுக்கப்படும் சுத்தமான நெய் ஆகஸ்ட்டுமீ முதல் ஷை கம்பெனியில் கிடைக்கும்.

THE COMPLETE LETTER WRITER

2nd Edition Revised and Enlarged

by Hari Charan Das

Price Re. 1. *(full cloth Gilt.)*

A Universal Guide to the Art of Letter Writing for all positions of Life.

It contains Chapters on :—1. Notes and general Information, 2. Private Correspondence, 3. Receipt forms, 4. Bill forms, 5. Municipal Office, 6. Post Office department, 7. Postal department, 8. Income tax Office, 9. Railway Office, 10. Police Office Correspondence, 11. Enquiring about a missing article on the Tram-car, 12. Medical department, 13. Collector's Office Correspondence, 14. Correspondence with Attorneys, Vakils, Muktears etc., 15. Correspondence with Doctors, 16. Steamer Correspondence, 17. News paper Correspondence, 18. Commercial and Govt. Office Correspondence, 19. Miscellaneous Applications and forms, 20. Abbreviations and Daily Wages.

A copy of this book will dispense with the necessity of seeking the help of others for writing Letters, Applications, etc.

To be had of—**M. L. DAS CO.,**

122, *Baitakkhana Road, Calcutta.*

நோட்டீஸ்

ஒவ்வொரு தமிழ மாதம் முதல் தேதியிலும் தவறாமல் நமது பத்திரிகை யனுப்பப்படுகிறபடியால், "கிருஷிகன்" சந்தாதார்களில் எவராவது தமிழ் மாதம் ஐந்தாம் தேதிக்குள் பத்திரிகை பெறாவிட்டால், பத்திரிகை பிரசுரமாகிவிட்டதோ இல்லையோ என்னும் சந்தேகமடையாமல் உடனே கிருஷிகன் மானேஜருக்குப் பத்திரிகை சேராத விஷயம் தெரிவித்தால் அந்தந்தத் தபாலதிகாரிகளுக்கு எழுதி விசாரிக்கும்படி செய்வதுடன் வேறு பத்திரிகையுமனுப்பப்படும்.

சந்தாதாரர்கள் நமக்குக் கடிதம் எழுதும்போதெல்லாம் தயவுசெய்து விலாசத்தின்மேல் எழுதியிருக்கும் நம்பரைக் குறிப்பிட்டு எழுதவேண்டும். அச்சடித்திருக்கும் Register No. M. 801 என்பதை எழுதிவிடக்கூடாது என்பதைக் கவனிக்கக் கோருகிறோம்.

"கிருஷிகன்" சித்திரை, ஆடி, ஐப்பசி மாதங்களின் சஞ்சிகைகள் செலவாகிவிட்டதால் இனிமேல் இவ்வருஷத்தில் சேரும் சந்தாதாரர்களுக்கு இம்மூன்று பிரதிகளும் கொடுக்கமுடியாது. எழுதிய கடிதங்களுக்குப் பதில் கிடைக்க வேண்டுமானால் ரிப்ளை கார்டாவது ஸ்டாம்புகளாவது அனுப்பவேண்டும்.

மானேஜர்.

கிருஷிகன்

மாதந்தோறும் பிரசுரமாகும் ஓர் விவசாயப்பத்திரிகை. ஷை பத்திரிகையானது விவசாயத்தில் அனுபோகமும் பாண்டித்யமுமுள்ளவர்களால் எழுதப்பட்டு வருகிறது. ஒவ்வொருவரும் வாங்கி வாசித்து நமது தேசத்து விவசாயம் விருத்தியடையவேண்டும் என்னும் எண்ணத்துடன் காகிதக்கிரயமும் அச்சுக்கூலியும் தபால் செலவும் மாத்திரம் கிடைக்கும்படிக்கான குறைந்த சந்தா வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா அங்கீகரிக்கப்படமாட்டாது. ஒவ்வொரு வருஷமும் சித்திரைமீ முதல் ஆரம்பமாகிறது. கடந்த சஞ்சிகைகளைக் கூடுமானவரையில் சப்ளை செய்யப்படும்.

சந்தா விபரம்	ரூ.	அ.	பை.
இந்தியா, பர்மா, சிலோனுக்கு மாத்திரம் தபாற்கூலி உள்பட வருஷம் ஒன்றுக்கு	0	12	0
வி. பி. கமிஷன் அணா 1-பிரத்தியேகம்.			
தனிப்பிரதி	0	2	0

மற்ற அயல்தேசங்களுக்குத் தபால்கூலி மாத்திரம் பிரத்தியேகம்.

வேண்டியவர்கள்

ரங்கராஜு அண்டு பிரதர்ஸ்,
5, மௌண்ட்ரோட், சென்னை

என்று எழுதி வி. பி. மூலமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

இந்தியா, பர்மா, சிலோன் முழுமையும் பேயர்பேற்று யாவராலும்
அங்கீகரிக்கப்பட்ட கம்பேனி,

காதர் அண்டு யூசப் பிரதர்ஸ்

கெடியார வர்த்தகர்கள் இந்தியா கவர்ன்மெண்டு உத்தியோகஸ்தர்களுக்கு கெடியாரம் சப்ளை செய்கிறவர்கள் நெ. 42. A. சென்னை. E.

நிக்கல் சில்வர் மேல் பார்வையில் மணிபார்க்கும்படியான கடியாரம் மேல் சாவி யுள்ளதுமான ஸ்காந்தமல்லாத (**Non Magnetic**) சர்தார் (**Sirdar**) லீவர் ரூபாய் 12, வெள்ளி 18.
Oxydised ரூ. 14.



நிக்கல் சில்வர் மேல் பார்வையில் மணிபார்க்கும்படியான கடியாரம் மேல் சாவி யுள்ளது ஸ்காந்தமல்லாத (**Non Magnetic**) (**Lever**) லீவர் ரூபாய் 8, வெள்ளி 14.

நெ.	101.	நிக்கல் மேல்பார்வை யுள்ளதும் மேல்சாவி யுள்ளதும் டயல்மேல் சிஷ்டம் லீவர் பேடண்டு மார்க்கு நடு அளவு	3	0	0
,,	1.	நிக்கல் மேல்பார்வை யுள்ளதும், மேல்சாவி யுள்ளதுமான ரெயில்வே ரெகுலேட்டர் ரிஜிஸ்டர் கண்டயம் ஸ்டாம்பு	5	0	0
,,	104.	வெள்ளி முழுமூடியுள்ளதும், மேல்சாவி அல்லது உள் சாவியுள்ளதும் சிறியது அல்லது நடு அளவுள்ளதுமான ஹண்டிங் கெடியாரம்	12	8	0
,,	10.	வெள்ளி மேல்பார்வை யுள்ளதும் மேல்சாவி அல்லது உள்சாவி யுள்ளதும்,15-கெம்பு செதுக்கினதும் நடு அளவுள்ளதுமான பேடண்டு லீவர் கெடியாரம்	16	0	0
,,	108.	வெள்ளி இரண்டு பக்கமும் மூடிபோட்டதும், மேல் சாவி அல்லது உள்சாவி யுள்ளதும் 15-கெம்பு செதுக்கினதுமான பேடண்டு லீவர் $\frac{1}{2}$-ஹண்டிங் கெடியாரம் நடு அளவுள்ளது	20	0	0

N. B.—இன்னும் வெஸ்டு எண்டு ஜான்பாரல் முதலிய கம்பெனியால் செய்யப்பட்ட பலவிதமான கெடியாரங்களும், வெள்ளியிலும், பொன்னிலும் 150-ரூபாய் விலைவரையில் இக் கம்பெனியில் கிடைக்கும். கேட்லாக் தபால் சார்ச்சு இல்லாமல் அனுப்பப்படும். ஒவ்வொரு கெடியாரத்துடன் ஒரு வெல்வெட் பெட்டி ஒரு கண்ணாடி, ஒரு மெயின் ஸ்பிரிங்கும், வில், காரண்டி பத்திரமும் கொடுக்கப்படும்.

Printed at the Guardian Press, Mount Road, Madras.